# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்

CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 11
ஜூலை 2022
விலை ரூ 10/-





**கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு போக்குவரத்து ஊழியர் சம்மேளனத்தின் 15வது மாநில மாநாட்டில் மத்திய அமைப்பின் சார்பாக பொதுச் செயலாளர் எஸ்.இராஜேந்திரன் அவர்கள் நினைவு பரிசு வழங்கி மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினார்**







**கேங்மேன் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய தலைமையகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் 10.6.2022 - சென்னை**



## வேலூர் கிளையின் ஆண்டு பேரவை

26.06.2022





B.P. 2 உத்திரவுக்கு எதிராக
தொழிற்சங்கங்களால் கொடுக்கப்பட்ட ஆட்சேபனையை
கண்டு கொள்ளாத வாரிய நிர்வாகத்தை கண்டித்து
சென்னை தலைமையகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

07.06.2022



திருவண்ணாமலை கிளையின் ஆண்டு பேரவை

25.06.2022



# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**ஜூலை2022**


**உள்ளே....**


- ★ எத்தனைக் காலம் தான் ஏமாற்றுவார்.....
- ★ இராணுவத்திலும் அவுட்சோரிசிங்....
- ★ வேலை தருவது அரசின் கடமை அல்லவா?
- ★ மத்திய அமைப்பு கடந்து வந்த பாதை......
- ★ மின்வாரிய பணிகளை அவுட்சோர்சிங் விடுவது தீர்வாகுமா....
- ★ என்.டி,பி.எல் அனல் மின்நிலையம் முன் காத்திருக்கும் போராட்டம்
- ★ நுகர்போர்களின் விவரங்களை தனியாரிடம் விடுவதா
- ★ கேங்மேன் போராட்டம்
- ★ பெண்களுக்கு நீதிகேட்டு நடந்த போராட்டம் வெற்றி
- ★ குழந்தைகளை கொண்டாடுவோம்....



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



**ஆசிரியர் குழு**

எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# எத்தனைக் காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

இந்திய தேசத்தின் பாதுகாப்பைப்பற்றி கவலைப்படாத ஒன்றிய அரசின் மோசமான திட்டம் தான் அக்னிபாத்.இந்திய இளைஞர்களின் குறிப்பாக தேசப்பற்றுள்ளவர்களை இராணுவத்தில் சேர ஆசைப்படுவர்களை சிதைக்கும் திட்டம்தான் இந்த திட்டம். நாடு முழுவதும் ஏற்பட்ட கிளர்ச்சியில் இந்த திட்டத்தை கைவிடப்பட வேண்டும் என்பதே தேசபக்தர்களின் எதிர்பார்ப்பு.

சமீபத்தில் நடந்த ஜி.எஸ்.டி. கவுன்சிலில் எழுதும் மை, பிரிண்டிங் மை, வரையும் மை ஆகிவற்றிற்கும் பேக்கேஜ் செய்யப்பட்ட தயிர், மோர், போன்றவற்றிற்கும் 18 சதம் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்பட்டுள்ளது.

செக்புக், கத்தி, பேப்பர் உள்ளிட்டவைகளும் தப்பவில்லை.ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையால் உழைக்கும் வர்க்கம் இந்த ஜி.எஸ்.டி. உயர்வினால் கடுமையாக பாதிக்கப்படுகிறது. பொதுத்துறைகளை விற்று காசாக்க நினைக்கும் இந்த மோடி அரசின் நாசகர நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்ற நிலையில் உழைக்கும் வர்க்கம் அடுத்தக்கட்டப் போரராட்டத்திற்கு செல்ல வேண்டும்.

தமிழக திமுக அரசு ஒன்றிய அரசை எதிர்த்து வரும் வேளையில் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட காண்ட்ராக்ட், கேசுவல், அவுட் சோர்சிங் முறையை தமிழக மின்வாரியத்தில் அமல்படுத்த ஒன்றியஅரசு தயாராகி வருகிறது. வடசென்னை நிலை-3 மின் உற்பத்திக்கு தயாராக உள்ள நிலையில் END TO END அவுட் சோர்சிங் விடுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மின்வாரியத்தில் ஏற்பட்டுள்ள காலிப்பணி இடங்களை எல்லாம் அவுட் சோர்சிங் முறையை பயன்படுத்த திட்டமிட்டு வருகிறார்கள். போராடிப் பெற்ற உரிமைகளையும், முத்தரப்பு ஒப்பந்தங்களையும் பறித்து வருகிறது. தொழிற்சங்கங்கள் மின்வாரியத் தலைவரை சந்தித்து முறையிட்டாலும் தீர்வுகள் எட்டப்படுவதில்லை.

தொழிலாளர்களின் பொருளாதார கோரிக்கை மீது விடியல் அரசு செவிசாய்க்க மறுக்கிறது. தேர்தல் கால வாக்குறுதிகள் வாக்குறுதிகளாக இருக்குமோ என்ற எண்ணமும் எழுகிறது.

தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு போராடியதால் வாரிய ஆணை எண். 2 நாள் 16.04.2022-ல் சில மாற்றங்களை செய்தாலும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை. திருப்பிச் செலுத்தும் தொகை என்ற காரணத்தால் முன் பணக்கடன்களுக்கு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. 62 ஆண்டுகள் மின்வாரியத்தில் இப்படியொரு நிலை உருவாகவில்லை. பதவி உயர்வுகளும்,இடமாறுதல்களும் ஏலத்தை நோக்கி நகருகின்றன. பாடுபட்டு சேர்த்த பணத்தை யாரோ ஒரு சிலர் லாபம் அடைகிறார்கள்.மாறுதல் உத்தரவு பெறுவதற்கு இந்த நிலை மாறுமா என்ற கேள்வியும் எழுகிறது.

காலிப்பணி இடங்களை நிரப்பாமல் எப்படி வேலை செய்வான் தொழிலாளி! கூடுதல் பணிச்சுமையோடு தன்னை வருத்திக்கொண்டு வாரியத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரப்படுத்த மனம் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி என்று பணி நியமனம் செய்யப்பட்ட கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வாரியத்திற்கும், அரசிற்கும் மனம் இல்லை. கடந்த ஓராண்டில் 29 கேங்மேன் தொழிலாளர்களை பலிகொடுத்த பின்பும் கூட அடிமட்ட பதவிகளை நிரப்புவதற்கு வாரியத்திற்கு மனம் இல்லை. அடிமைகளை போலவே அவர்களை நடத்துவது.

மின்வாரியம் மட்டுமல்ல போக்குவரத்து, டாஸ்மார்க் போன்ற முக்கிய துறைகளிலும் கூட ஊழியர்கள் தங்களது கோரிக்கையை நிறைவேற்றாத காரணத்தால் அதிருப்தியில் உள்ளார்கள்.

அரசு புதிய பேருந்துகள் வாங்குவதற்குக்கூட நிதியில்லாமல் போக்குவரத்து கழக சட்டம் 288A விதியை பயன்படுத்தி, தனியாரிடம் பேருந்துகளை குத்தகைக்கு எடுப்பார்களாம். டிரைவரும், பேருந்தும் தனியார்கள். கண்டக்டர் போக்குவரத்து கழக ஊழியராம்.

ஏற்கனவே ஒன்றிய அரசு ரயில்வேயில் தனியார் மயத்தை புகுத்தி உள்ளது. கடந்த ஜூன் 16-ம் தேதி அன்று முதல் தனியார் ரயில் கோவையிலிருந்து சீரடி வரை துவங்கப்பட்டுள்ளது. தண்டவாளம்,ஸ்டேசன், டிரைவர் எல்லாம் இரயில்வேக்கு சொந்தமானது. ஆனால் ரயில், கட்டணம் இவைகள் தனியாருக்கு சொந்தமானது.

தனியார் மயத்தின் மோகம்! அரசின் பொதுத்துறைகள் காணாமல் போக செய்து வருவதில் மத்திய,மாநில அரசுகள் போட்டி போடுகிறதோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

முந்தைய அதிமுக ஆட்சியில் எதையெல்லாம் தொழிலாளர்களுக்கு அமல்படுத்த மறுத்தார்களோ அதையே விடியல் அரசு என்று சொல்லி ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்ற கழக அரசு வாக்களித்த தொழிலாளர்களுக்கு ஒர வஞ்சனை செய்யலாமா?

**மாற்றம் ஒன்றே மாறாதது ஆம்!**
**உரிமைகளைப் பெறுகின்ற போராட்டங்கள்**
**என்றும் ஓயாது!**



# இராணுவத்திலும் அவுட்சோர்சிங்! அக்னிபாத்

மோடி அரசாங்கம் ராணுவத்திலும் அவுட்சோர்சிங் முறையை கொண்டு வர திட்டமிட்டிருப்பது இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கே ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. நாடு முழுவதும் அனைத்து பகுதி மக்களும் வலுவான போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

ஒன்றிய மோடி அரசு பிக்சட்டேம் எம்ப்ளாய்மென்ட் சட்டத்தை ராணுவத்தில் அமல்படுத்த துணிந்துள்ளது. 46,000 காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கு பதிலாக பென்சன் உள்ளிட்ட சலுகைகளை பறிப்பதற்கு பிக்சட்டேம் எம்ப்ளாய்மெண்ட் சட்டத்தை கொண்டு வர விரும்புகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ராணுவத்திற்கு ஆட்கள் தேர்வு செய்யப்படவில்லை. தேர்ந்தெடுக்கின்ற இராணுவ வீரர்களுக்கு குறுகிய கால வேலை வாய்ப்பு, நிறைவான பொருளாதார சலுகைகள் என்ற ஆசையைத் தூண்டி 4 ஆண்டுகளுக்கு மட்டுமே வேலையை வழங்கி பணியில் இருந்து வெளியேற்றும் பொழுது சுமார் 12 லட்சம் வழங்கப்படும் எனஅறிவித்துள்ளது. மேலும் இதில் 25 சதமான வேலை இராணுவப்பணி, ஏர் இந்தியா போன்றவற்றில் பணி அமர்த்தப்படுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் இரண்டு கேள்விகள் எழுகிறது. ஒன்று பிக்சட்டேம் எம்ளாய்மென்ட் முறையை இராணுவத்தில் புகுத்தி 4 ஆண்டுகளில் அவர்களை விடுவிப்பதற்கான காரணம் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தால் அவர்களுக்கு கிராஜிவிட்டி வழங்க வேண்டும் என்ற சட்டத்தை அமலாக்காமல் இருக்கலாம் அல்லவா?

டாடாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஏர் இந்தியாவில் எவ்வாறு இந்த ஊழியர்களை நியமிக்க முடியும். இது போன்ற எண்ணற்ற கேள்விகள் இதில் உள்ளன.

தேசத்தின் பாதுகாப்பைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாத அரசாக ஒன்றிய பி.ஜே.பி.அரசு உள்ளது.

முன்னாள் இராணுவ தளபதிகள் மற்றும் பாதுகாப்பு உயர் அலுவலர்கள் இது தவறு என சுட்டிக்காட்டிய பொழுதும் அதை எல்லாம் மீறி இராணுவத்தில் அக்னிபாத் திட்டத்தை அமலாக்கத்தின் மர்மம் என்னவோ? இதற்கு எதிராக குரல் கொடுத்து டிவிட்டரில் பதிவு செய்த முன்னாள் இராணுவ அதிகாரியை அவரது கருத்தை சங்கிகள் வாபஸ் பெற வைத்தனர். நாடாளுமன்றத்திற்கு கூட உட்படுத்தாமல் 90 நாட்களில் இது நிறை வேற்றப்படும் என காலக்கெடு வைப்பது ஏன்?

மேலும் அக்னிபாத் திட்டத்திற்கு எதிரானபுதிய 100 இராணுவ பள்ளிகளை உருவாக்க உள்ளதாக செய்திகள் வெளி

வருகிறது. பாடத்திட்டம் மற்றும் பயிற்சிக்கும் இராணுவத்தின் படைகளுக்கும் எவ்விதமான தொடர்பும் இருக்காது என்ற செய்தியும் வருகின்றது. ஏனெனில் இராணுவப்பள்ளியின் செயல்பாடு ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக மாறும். அவ்வாறு நடைபெற்றால் இராணுவத்தில் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் அமலாக்க வாய்ப்பு ஏற்படும். இது கடுமையான மோசமான விளைவுகள் உருவாகும்.

இதற்கான வயதான 17-ல் இருந்து 21 வயது என நிர்ணயம் செய்திருப்பது 4 ஆண்டுகள் மட்டுமே பணி செய்து வெளியே வரும் இந்த இளைஞனின் வாழ்வு பணிப்பாதுகாப்பற்ற சூழலாக மாறம் பொழுது இளைஞர் வேறு வேலை வாய்ப்புகள் கிடைக்காமல் பெரும் விளைவு உருவாக்கும். இது சமூகத்தின் கலாச்சார பண்பாட்டு சமூகத்தை சீரழிக்கும்.

வலதுசாரி இந்துத்துவா சித்தாந்த கருத்துக்களை நிகழ்த்துவதற்கு உதவுமே தவிர தேசத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாக எழும். மோடி அரசு அனைத்து துறைகளையும் அவுட்சோர்சிங் விடுவதற்கு எடுத்து வரும் ஒரு நடவடிக்கையின் அம்சம் தான் இது.

உலகத்தின் மிக அதிக இராணுவ வீரர்களை கொண்ட பட்டியலில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.

தேச பக்தர்களாக உள்ள உழைப்பாளி மக்கள் தேசத்தின் நலன் கருதி பாதுகாப்பை உறுதிப்படுத்த இளைஞர்களின் வேலை வாய்ப்பை உத்தரவாதப்படுத்த அக்னிப்பாத்தை எதிர்ப்போம்!

**- எஸ்.இராஜேந்திரன்**



## மத்திய சென்னை மின்வட்டக் கிளையின் 16வது திட்ட மாநாடு

மத்திய சென்னை கிளையின் 17வது திட்ட மாநாடு 25.06.2022 அன்று சிந்தாதிரிப் பேட்டை டி.ஜே. அரங்கில் நடைபெற்றது. தோழர் ஜி.மணவாளன் கொடியேற்றி, திட்ட தலைவர் தோழர் வி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை மத்திய சென்னை சிஐடியு மாவட்ட செயலாளரும், மாநில செயலாளர்களில் ஒருவரான தோழர் சி.திருவேட்டை துவக்கி வைத்தார். வேலை அறிக்கையை தோழர் எஸ். கண்ணன் அவர்களும், வரவு-செலவு அறிக்கையை தோழர் எஸ்.முருகவேல் அவர்களும் சமர்ப்பித்தனர்.மாநாட்டை வாழ்த்தி தோழர் ஆர்.ரவிக்குமார், மண்டல செயலாளர் சென்னை வடக்கு, தோழர் எம்.தனலட்சுமி கன்வீனர் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு, தோழர் ம.தயாளன், மாநில செயலாளர் தோழர் கே.நடராஜன், மாநில நிர்வாகி, ஓய்வு பெற்றோர் நல அமைப்பு, தோழர்கள் ஜி. சத்தியமூர்த்தி - வடக்கு, எஸ். தசரதன் - மேற்கு, எம். முத்து - ஜி.சி.சி மற்றும் மாநில தலைவர் தி. ஜெயசங்கர், மாநில பொருளாளர் எம்.வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநாட்டினை நிறைவு செய்து, தோழர் டி. பழனிவேல் துணைப்பொதுச்செயலாளர் உரையாற்றினார். மாநாட்டில் தலைவராக தோழர் வி.சீனிவாசன், செயலாளராக எஸ். கண்ணன், பொருளாளராக எஸ். முருகவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# வேலைதருவது அரசின் கடமை அல்லவா?




தனி மனிதன் சமூக அந்தஸ்தை உயர்த்துவது வேலையாகும். ஒரு குடும்பத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை தேவையாக இருப்பது கல்வியும், வேலையும் ஆகும். இதை தருவது அரசின் கடமை என்று சுதந்திரம்பெற்ற இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தில் எழுதப்பட்ட ஒன்றாகும். சுதந்திர இந்தியா இந்த அடிப்படையில் தான் தனது பயணத்தை துவங்கியது. பிரிட்டிஷ்சாரிடம் இருந்து விடுதலை பெற்ற பின்பு தனது சொந்த காலில் நிற்பதற்காக வேகமான வளர்ச்சியை எட்டுவதற்காக வளர்ந்த நாடுகளோடு போட்டி போடுவதற்காக அனைவருக்கும் கல்வி, வேலை, உணவு அளிப்பதற்காக துவங்கிய பணிகள் ஏராளம். அதில் ஒன்று தான் ஐந்தாண்டு திட்டங்கள்.

ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் தொழில் துறையில், விவசாய துறையில், அதிகமான முதலீடுகளை செய்து ஒரு புறம் வேலை வாய்ப்பை அளித்து மறுபுறம் தொழிற்துறையில் முன்னேற்றம் காண்பதாகும். நவீன தொழில் நுட்பங்களை ரஷ்யாவிடம் பெற்று இந்திய தொழிலாளிகளுக்கு பயிற்சி அளித்து இந்தியாவிலேயே உற்பத்தி செய்யும் திட்டத்தை பண்டிட் ஜவஹர்லால் நேரு கொண்டு வந்தார். இதற்கு முதலாளித்துவ, சோசலிச கலப்பு பொருளாதாரம் என்றும் பெயரிடப்பட்டது. ஆக சுதந்திரம் பெற்ற இந்தியா தனது பாதையில் எந்த நோக்கத்துடன் செயல்பட்டதோ, குறிப்பாக அனைவருக்கும் கல்வி, வேலை, உணவு என்பது 1990-க்கு முன்பு வரை அதே பாதையில் பயணித்தாலும் நோக்கம் முழுமையடை வில்லை. கல்வியும், வேலையும் அனைவருக் கும் கிடைக்க வேண்டும்.

அரசாங்கத்திடம் இருந்த கல்வித்துறை 1980-ம் ஆண்டுக்கு பிறகு தனியாருக்கு சென்றது. இதனால் கல்வி, வியாபாரப் பொருளானது. புதிய புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கிய அரசு 1990-க்கு பிறகு தொழில் தொடங்காமல் தனியாருக்கு கூவி,கூவி அழைத்தது. தொழில் தொடங்க அரசு உதவியுடன் பல்வேறு மானியங்களை அளித்து தொழில் தொடங்க ஊக்குவித்தது. அரசு தொழில்களை நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைக்கு வந்தது ஒன்றிய அரசு. கட்டுப்பாடற்ற தனியார் மயத்தை கட்டுப்படுத்த தவறியது. இதனால் அரசின் வேலை வாய்ப்புகள் குறைந்து தனியார் வேலை வாய்ப்புகள் அதிகமானது. நிலையற்ற தனியார்மய வேலை வாய்பினால் நிலையற்ற வருமானம் கிடைத்தது. உழைப்பு சுரண்டல் அதிகரித்தது. இதனால் தனியார்மய வேலை வாய்ப்புகளை துவக்க காலத்தில் மக்கள் அதிகம் விரும்பவில்லை.

இந்தியாவின் மக்கள் தொகை சுதந்திரம் அடைந்த போது 36 கோடிகளாகும். இந்தியாவின் மக்கள் தொகை என்பது அதிவேகமாக வளர்ந்து வருவதைக் கண்ட இந்திய சுகாதாரத்துறை குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டத்தை கொண்டு வந்தது. மக்கள் மத்தியில் இது தொடர்பாக பிரச்சாரம் செய்தது. இருப்பினும் இதன் வளர்ச்சி ஒரு குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் என்று மாறுவதற்கு நாற்பது ஆண்டுகள் பிடித்தது. 1990-ம் ஆண்டுக்கு பிறகு தான் ஒரு குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் என்ற நிலையை பெரும்பான்மையான குடும்பங்களில் ஏற்பட்டது. மக்கள் தொகைக்கும்,கல்வி,மற்றும் வேலை வாய்ப்புக்கும் நெருங்கிய தொடர்ப்பு இருந்ததால் இதனை செயல்படுத்த வேண்டிய நிலைக்கு அரசு சென்றது. இருப்பினும் 1990-ம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை 87 கோடியை தாண்டியது. இந்திய சுகாதாரத்துறையின் நடவடிக்கை என்பது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாததின் காரணம் மக்களின் அறியாமையே.

1970-ம் ஆண்டிலிருந்து 1990-ம் ஆண்டு வரை தொழில் வளர்ச்சி அதிகம் ஏற்பட்ட பொழுது மக்கள் தொகைக்கேற்ப வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. ஆரம்பக்கல்வி கூட பெரும்பாலான மாநிலங்களில் அளிக்கப்படவில்லை. 2022-ம் ஆண்டில் இருக்கும் நாம் தற்போது கூட மாராட்டியம், பீகார்,உத்ராஞ்சல்,உத்திரபிரதேசம் போன்ற வடக்கு, வடகிழக்கு மாநிலங்களில் இன்றளவுங்கூட ஆரம்ப கல்வியில் இடைநிற்றல் என்பது 40 சதவீதத்திற்கு மேல் உள்ளது. அதிலும் பெண்கள் இடை நிற்றல் என்பது 65 சதத்திற்கு மேல் ஆக அனைவருக்கும் கல்வியை அளிப்பதில் மத்திய மாநில அரசுகள் தவறிவிட்டது. புதியதாக உருவாக்கப்பட்ட நாடு, அல்லது புதியதாக சுதந்திரம் அடைந்த நாடு செய்ய வேண்டிய முதல் கடமை என்பது அனைவருக்கும் கல்வி, வேலை, உணவு. கல்வியும் வேலையும் தொடர்ந்து அளித்து விட்டால் பிறகு உணவை அவர்களாகவே தேடிக்கொள்வார்கள். இந்த அடிப்படை கோட்பாடுகளை பின்பற்றாத நாடுகள் இன்றளவும் வளரும் நாடுகளின் பட்டியலில் இருக்கின்றது.

இந்தியாவை விட அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா, மற்றும் இந்தியாவிற்கு பின் சுதந்திரம் அடைந்த நாடு சீனா. மக்கள் தொகை கட்டுப்படுத்துவதிலும், தொழில் வளர்ச்சியை பெருக்குவதிலும், சுயசார்பு கொள்கையை அமலாக்குவதிலும் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். கம்யூனிச கொள்கை கொண்ட சீன நாடு கம்யூனிசம் பேசியே அழிந்து விடும் என்று பேசியவர்கள், சீன மக்கள் தொகைக்கேற்ப அவர்களால் வேலை அளிக்க முடியாது என்று எழுதியமுதலாளித்துவ பத்திரிக்கைகள் விழிபிதுங்கி நிற்கிறது. இன்று ஆச்சரியத்துடன் சீனாவை பார்கிறார்கள்.

இன்று சீனா வல்லரசு நாடுகளின் பட்டியலில் முதலிடம். ஏழைகள் இல்லாத நாடு, அதிக பணக்காரர்கள் கொண்ட நாடு பொருளாதார வலிமை வாய்ந்த நாடுகளின் பட்டியலில் முதலிடம். எழைகள் இல்லாத நாடு , அதிக பணக்காரர்கள் கொண்டு நாடு என பல வகைகளில் முதலிடம் வகிக்கின்றது. கல்வி, வேலை ஆகியவற்றில் உலக அளவில் முன்னிலை வகிக்கின்றது சீனா.


அரசு வேலையோ, தனியார் வேலையோ அதை உருவாக்குவதும், உறுதி செய்வதும் அரசின் பிரதான கடமையாகும். கல்வியை தனியாரின் வியாபார பொருளாக மாற்றி விட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பை உருவாக்க முடியாத அரசு பொருளாதார வலிமையை இழக்கும்.

மனித வளத்தை பெருக்கி இந்திய பொருளதாரத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு போக வேண்டிய கடமையும், பொறுப்பும் மத்திய மாநில அரசுகளுக்கு உள்ளது. அதை திறம்பட செய்பவர்கள் வெற்றியடைகின்றார்கள். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க தவறுகின்ற எந்த நாடும் வளர்ந்ததாக வரலாறு இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக நாம் வளராமல் தேக்க நிலையில் உள்ளதற்கும் இதுவே காரணமாக உள்ளது.

**கல்வியும் வேலையும் வாக்களித்த மக்களின் அடிப்படை உரிமை. அதை தருவது அரசின் கடமை.**

**- தி.ஜெயசங்கர்**

# COTEE
# கடந்து வந்த பாதை 52 ஆண்டுகளில்....




தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் 52 ஆண்டுகளுக்கான வரலாறு! கடந்து வந்த பாதை மலர் படுக்கை அல்ல! அது நெருப்பாற்றில் நீந்திய வரலாறு! கற்களும் முட்களுமாய் அதன் மேல் நடந்து ஆயிரக் கணக்கான தோழர்களின் தியாகத்தாலும் அவர்களின் இரத்தாத்தாலும் உருவாகி வளர்ந்து வரும் அமைப்பு மின் ஊழியர் மத்திய அமைப்பு.

1970 நவம்பர் மாதம் 14-ல் துவங்கப்பட்டு இன்றைக்கு 52 வது ஆண்டை அடியெடுத்து வைக்க உள்ள நிலையில், நமது 17வது மாநில மாநாடு சென்னையில் ஆகஸ்ட் 11 முதல் 14 வரை நடைபெறவுள்ளது.

“மனிதகுல வரலாற்றில் பிரிக்க முடியாதது மார்க்சியமும் மின்சாரமும்” என்றார் கவிப்பேரரசு வைரமுத்து. அது போலத்தான் மின்வாரிய ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் என அனைவர் மனதிலும் நிறைந்து இருக்கும் அமைப்பு மின் ஊழியர் மத்திய அமைப்பு.

நமது தலைவர்கள் முன்னணி தோழர்கள் என எத்தனையோ தோழர்கள் போராடி பெற்ற உரிமைகள், சலுகைகள் எண்ணிலடங்காது.

- ★ பண்டிகை முன்பணம் கோரி போராடி பெற்றது.
- ★ தீபாவளி முன்பணத்தை தீபாவளிக்கு பின்னர் தான் அளிப்பேன் என்ற நிலையை மாற்றி, முன்பே பெற்ற தந்தது மத்திய அமைப்பு.
- ★ மின் வாரியத்தில் எழுத்துத்துறை பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பென்சன் இருந்த நிலையில் அனைவருக்கும் பென்சன் என முழக்கமிட்டு 01.07.1986 முதல் களப்பிரிவு ஊழியர்களுக்கும் பெற்று தந்தது மத்திய அமைப்பு.
- ★ பஞ்சப்படிக்காக போராடி, அனைவருக்கும் பஞ்சப்படியை எப்போதெல்லாம் மத்திய அரசு உயர்த்துகிறதோ அப்பொழுதெல்லாம்

மின்வாரிய ஊழியர்களும் பெறும் நிலையை உருவாக்கியது மத்திய அமைப்பு. தற்போது மாநில அரசு முடக்க நினைக்கின்ற பொழுது போர்க்களத்தில் முன்னின்று செயல்பட்டு வருகிறது.

★ மின்வாரியத்தின் உற்பத்தி நிலையங்கள் கட்டி முடிந்து பயன்பாட்டுக்கு வரும் நேரத்தில் அதில் ஈடுபட்ட ஒப்பந்த ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப திட்டமிட்ட பொழுது கடுமையாக போராடி ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்திய அமைப்பு.

★ 1970 லிருந்து - ஒப்பந்த ஊழியர்கள் படிப்படியாக நமது போராட்டத்தின் மூலம் நிரந்தரப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

★ ஒப்பந்த ஊழியர்களும்- நிரந்தர ஊழியர்களும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து இருவரையும் ஒன்றாக இணைத்து இன்று வரை போராடி வரும் நமது மின் ஊழியர் மத்திய அமைப்பு

★ பகுதி நேர ஊழியர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் - நிரந்தர தொழிலாளிக்கு வழங்குவது போல போனஸ் பெற்று தந்தது மத்திய அமைப்பு.

★ கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு முதுநிலை கணக்கீட்டு அலுவலர் பதவிகள் வரை உருவாக்கி தந்த அமைப்பு மின் ஊழியர் மத்திய அமைப்பு.

★ களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் தேக்க நிலையை அகற்ற 386 சிறப்பு நிரைல முகவர், 2000 மின்பாதை ஆய்வாளர் பதவிகள், புதிய மின் நிலையங்களுக்கு பதவி அனுமதி என பட்டியல் போட்டுக் கொண்டே இருக்கலாம்.

★ நிர்வாகப் பிரிவில், கணக்குப் பிரிவில், பண்டகசாலை பிரிவில் மற்றும் பொறியாளர்கள் என அனைவரின் நலன்களிலும் அக்கறை கொண்டு செயல்படும் அமைப்பு.

★ கடந்த 21.12.2020-ல் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் மூலமாக நாம் அனைவரையும் இணைத்து போராடி 5 துணை மின் நிலையங்களை அவுட்சோர்சிங் விடப்பட்டதையும், உபகோட்ட அளவில் விநியோகப் பிரிவில் 50 சதவீதம் காலியிடங்கள் இருப்பின் அவுட்சோர்சிங் விட வகை செய்யப்பட்ட வாரிய ஆணை 82 -ஐ ரத்து செய்ய வைத்தோம். இவைகளை தவிர மின் வாரியம் பொதுத்துறையாக மக்களுக்கும், நுகர்வோருக்கும் சேவை செய்யும் நிறுவனமாக தொடர்ந்து செயல்பட, போராட்டம் களம் கண்டு வருவதோடு, இன்று வரை மின்வாரியத்தை பொதுத்துறையாக பாதுகாக்க போராட்ட களத்தில் அனைத்து சங்கங்களையும் இணைந்து போராடி வரும் அமைப்பு

மத்திய அமைப்பின் வளர்ச்சியில் எத்துணை போராட்டங்கள் பட்டிய லிட்டால் பக்கங்கள் போதாது.

★ இன்று தமிழக மின் வாரியத்தில் சக்தியாக 34,000 உறுப்பினர்களை கொண்ட அமைப்பு நமது அமைப்பு.

★ புடம் போட்ட தங்கமாய் நமது தலைவர்கள் சிறை தண்டணை, ஆண்டுயர்வு வெட்டு, பணியிட மாற்றம், பதவி இறக்கம், டிஸ்மிஸ், சஸ்பென்ட் என அத்துணை இன்னல்களையும், தாங்கள் அனுபவித்து, தங்களையும் தங்களது குடும்பத்தை பற்றியும் கவலைப்படாமல், அடுத்த சந்ததிகளுக்காகவும் போராடிய எம் தலைவர்களின் பணிகளை போற்றுவோம்.

சென்னை மாநாட்டில்! கூடுவோம்! விவாதிப்போம்! மின்துறையை பாதுகாக்க நமது உரிமைகளை தக்க வைக்க நம் தலைவர்கள் கற்றுத்தந்த பாதையில் போராட்ட வியூகம் வகுப்போம்!

**வர்க்கத்தை இணைப்பதற்கு தடைகளை உடைப்போம்! முன்னேறுவோம்!**

**- எஸ்.இராஜேந்திரன்**

# மின்வாரிய பணிகளை அவுட்சோர்சிங் விடுவது தீர்வாகுமா!

மின்சாரம் என்பது மிக மிக முக்கிய பொருளாகவும், சமூகத்தின் வளர்ச்சிக்கும், இந்திய பெருளாதாரத்தின் வளர்ச்சிக்கும், அறிவியல் வளர்சிக்கும் முக்கியமான ஒன்றாகும். மின்சாரம் இல்லாமல் எதுவும் நடக்காது. என்ற வகையில் அனைத்தும் மின்சாரத்தைச் சுற்றியே உள்ளது. எனவே தான் மின்சாரத்தை தங்கத்தைவிட உயர்ந்த பொருளாக அனைவராலும் பார்க்கப்படுகிறது. டாக்டர் அம்பேத்கர் இதை உணர்ந்த காரணத்தினால் தான் வளர்ச்சியடையாத இந்தியா, வேகமான வளர்ச்சியை எட்டுவதற்கு மின்சாரம் என்பது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைவருக்கும் மலிவான விலையில் கிடைக்க வேண்டும் என்று கருதினார். அதனால் மின்துறையை மாநில அரசின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு சென்றார்.

இந்திய மக்கள் தொகைக்கேற்ப மின்சார உற்பத்தி என்பது சுதந்திரத்திற்கு முன்பும், சதந்திரத்திற்கு பின்பும் அதிகரித்து கொண்டே வருகிறது. அதிலும் குறிப்பாக சுதந்திரம் அடைந்த இந்தியா ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் தொழில்துறையில் அடிப்படை கட்டுமான பணிகளில் வேகமான வளர்ச்சியை எட்ட வேண்டுமென்று தீர்மானித்து நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள்,அதற்கு தேவையான மின்சாரம், மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரி ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு உற்பத்தி துறையிலும், தொழில் துறையிலும் பிரமாண்ட வளர்ச்சி ஏற்பட்டது. இந்த வளர்ச்சியின் காரணமாக இந்தியா வளரும் நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றது.

1991-ம் ஆண்டுக்கு பிறகு GATT ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிறகு உலகமயம்,தனியார் மயம், தாராளமயம் என்ற கொள்கைகளை அமலாக்கம் செய்யப்பட்டது. இதன் காரணமாக பன்னாட்டு கம்பெனிகள் இந்தியாவில் நுழைந்தது. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஐடி-நிறுவனங்கள் எண்ணற்றவை இந்தியாவில் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக தகவல் தொழில் நுட்பத்தில் இமாலய வளர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு இந்திய பொருளாதாரம் வளர வளர இந்தியாவில் மின்சாரத் தேவையும் அதிகமானது. மின்சாரத்தை திட்டமிட்டு உற்பத்தி செய்யாமல், மின்சார தேவையை அரசே ஈடுசெய்யும் அளவிற்கு சுயமான மின் உற்பத்தியை செய்யாமல் 1995-ம் ஆண்டு முதல் 2000-ம் ஆண்டுவரை இழுத்தடிப்பு செய்தது அரசு. மின்சார மசோதா 2000, மின்சார சட்டம் 2003-ன்படி தனியார் மின் உற்பத்தியாளர்களை அனுமதிக்கவும், மின் விநியோகத்தை தனியாருக்கு விடவும், மின்சார சட்டம் 2003 கொண்டு வரப்பட்டது. தனியார் மின் உற்பத்தியாளர்களை அரசு அனுமதிக்கின்ற போது ஒட்டு மொத்த இந்திய மின்சார தேவையை ஈடு செய்யும் என்று ஒன்றிய அரசு நம்பியது. ஆனால் 2005-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரை ஒன்றிய அரசு எதிர்பார்த்த அளவிற்கு தனியார் மின் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை.

மின்சார வாரியங்கள் நஷ்டத்தில் செல்வதாக கூறி மின்வாரியங்களை தனியாருக்கு விட 2003 மின்சார சட்டம் வழிவகை செய்தது. தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் தனியாரிடம் செல்வது தடைபட்டது. மாறாக மின்வாரிய பணிகளை

பகுதி பகுதியாக அவுட்சோர்சிங் என்ற பெயர் சூட்டி அரசு தனியார் மயம் செய்து வருகிறது. உதாரணமாக வடசென்னை அனல் மின் நிலையத்தில் 5 ஆண்டுகளுக்கு ரூ.6750 கோடிக்கு இராதா இன்ஜினியரிங் என்ற கம்பெனிக்கு குத்தகைக்கு விட்டுள்ளது. வாரியம் ஆண்டுக்கு ஒருமுறை ஒப்பந்த புள்ளி கோரி மின்வாரியம் ஒப்பந்தம் அளித்து வந்த நிலையில் தற்போது மின்வாரியம் ஐந்தாண்டுகளுக்கு குத்தகைக்கு அளித்துள்ளது என்பது ஒரு வகையில் தனியார் மயம் தான். மின்வாரியம் செய்து வரும் நடவடிக்கையானது ஒட்டகத்தின் கதைபோன்றது. தலை நனைகிறது,உடல் நனைகிறது என்று சொல்லி கடைசியாக மொத்தமாக உள்ளே நுழைந்த பின்பு, உள்ளே இருந்த நபரை வெளியே தள்ளிய கதையாக மாறப்போகிறது மின்வாரியம்.

மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்குவதற்கு அதிகப்படியான ஊழியர்கள் வேலை செய்வதும், அவர்களுக்கு அதிகமான சம்பளம் வழங்குவதும், பென்சன் மற்றும் ஓய்வூதிய சலுகைகள் வழங்குவதும் பிரதான காரணம் என்ற பொய்யைச் சொல்லி முழுபூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறது அரசு. மின்சார வாரியத்தின் நஷ்டத்திற்கு காரணம் திறமையற்ற நிர்வாகமும், அரசியல் தலையீடும் தான் என்பது ஊரறிந்த இரகசியம். 2006-ம் ஆண்டுக்கு பிறகு மின்சாரத் தேவையை சமாளிக்க தனியார் முதலாளிகளிடம் இருந்து மின்சாரத்தை கொள்முதல் செய்ததும் அதிக விலை கொடுத்து நிலக்கரியை வாங்கியதும், மின்வாரிய நஷ்டத்திற்கு காரணமாகும். விரிவாக்கப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை விடுவதும் தளவாட பொருள்களை கொள்முதல் செய்வதிலும் பல்லாண்டுகளாக நடைபெற்ற முறைகேடுகளும், மோசடிகளுமே மின்வாரிய நஷ்டத்திற்கு காரணமாகும்.

அவுட் சோர்சிங் விடுவதினால் மின்வாரியத்திற்கு இலாபம் ஏற்படப் போவதில்லை. தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி திறமை வாய்ந்த பொறியாளர்களையும், அதிகாரிகளையும், கொண்ட குழுவை அமைத்து மின்சார வாரியத்தை நஷ்டத்தில் இருந்து மீட்டு இலாபத்திற்கு கொண்டு வரக்கூடிய ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகளை செய்திட முடியும். வாரிய நிர்வாகமும், அரசும் ஏனோ இதை செய்ய மறுக்கிறது.தனியார் முதலாளிகள் திறமை வாய்ந்தவர்கள் என்றும், மின்வாரிய பொறியாளர்கள், ஊழியர்கள் திறமையற்றவர்கள் என்று திட்டமிட்டு பாவிக்கின்ற செயலானது வாரியத்தின் வளர்ச்சிக்கும், நன்மைக்கும் பயன்படாது. அவுட்சோர்சிங் விட்டால் மின்வாரிய ஊழியரைப் போன்ற ஒருவரையே தனியார் முதலாளியும் பணிக்கு அமர்த்துகின்றார். அப்படியிருக்க தனியார் மட்டும் மின்வாரியத்திற்கு லாபத்தை எப்படி தர இயலும். இதில் மிகப்பெரிய சூழ்ச்சி அடங்கியிருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

சிறு,குறு ஒப்பந்தங்கள் மூலம் பணிகளை செய்த ஒப்பந்தகாரர்கள் தற்போது அவுட்சோர்சிங் முறையில் பெரிய பணிகளை எடுத்து செய்கின்றனர். உதாரணமாக வடசென்னை அனல் மின் நிலையத்தில் இராதா இன்ஜினியரிங் செய்து வருகிறது.இவர்கள் சிறிது காலத்திற்கு பிறகு ஒட்டு மொத்த அனல் மின் நிலையத்தை குத்தகை என்ற பெயரால் தன்வயப்படுத்துவார்கள். இது போன்ற நிகழ்வுகள் மின் பகிர்மான வட்டத்திலும் எதிர்காலத்திலும் ஏற்படும். இவ்வாறு செய்வதால் மின்சார வாரியத்தின் நஷ்டம் அதிகரிக்குமே தவிர நஷ்டம் குறையாது.

## வாழ்த்துகிறோம்

தோழர் ஈ. சிவக்குமார், வேலுார் கோட்ட இணைச் செயலாளர், வருவாய் மேற்பார்வையாளர் பதவியிலிருந்து ஏ.டி.ஓ பதவி உயர்வு பெற்று கிருஷ்ணகிரி கோட்டம் பணியேற்பு பெற உதவிய மத்திய அமைப்பிற்கு நன்றி தெரிவித்து மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/-ம், கிளை வளர்ச்சி நிதியாக ரூ. 2,000/- ம் அளித்தார் வாழ்த்துக்கள்.

நிரந்தர பணியாளர்களை வேலைக்கு அமர்த்தாமல் அவுட்சோர்சிங் முறையில் வேலை செய்ததாக பெருமை பட்டு கொள்ளலாம். நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை குறைவு என்றும் பெருமைப்படலாம். ஆனால் ஒட்டு மொத்தமாக மின்வாரியத்தின் இலாப நஷ்டக்கணக்கில் நஷ்டமே அதிமாக இருக்கும். இலாபம் இருக்கப் போவதில்லை.

எனவே அவுட் சோர்சிங் விடுவதனால் மின்வாரியத்திற்கு இலாபம் ஏற்பட போவதில்லை. நேரடியாக அவுட்சோர்சிங் முறையில் குத்தகை எடுத்தவருக்கும் மறைமுகமாக அதை ஆதரித்தவர்களுக்கும் பயனாக இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்த சமூகத்திற்கு தனியார் துறை கேடுவிளைவிக்கும் வாக்களித்த மக்களுக்கு வேட்டு வைக்கும் சமூகத்தை சீரழிக்கும்.

**வாக்களித்தவர்களே சிந்தியுங்கள்**
**மின் ஊழியர்களே விழித்திருப்போம்.**

- தி.ஜெய்

## திருவண்ணாமலை மின்வட்டக்கிளை வட்ட மாநாடு

திருவண்ணாமலை கிளை வட்ட மாநாடு 25.06.2022 அன்று ஆரணியில் தோழர் காங்கேயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து தோழர் எஸ்.அம்பிகாபதி உரையாற்றியானார். வேலை அறிக்கையை தோழர் மு. பாலாஜி அவர்களும், வரவு- செலவு அறிக்கையை தோழர் வி.எம்.வெங்கடேசன் அவர்களும் சமர்ப்பித்தனர். மாநாட்டை வாழ்த்தி மண்டல செயலாளர் தோழர் சிவராஜ், சிஐடியு மாவட்டச் செயலாளர் ஆர்.மணி, மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர்கள் தோழர்கள் பி.கண்ணன், வி.மன்னார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

தலைவராக தோழர் ஆ. குருதேவன், செயலாளராக மு. பாலாஜி, பொருளாளராக தோழர் வி.எம்.வெங்கடேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.




## வேலூர் மின் திட்டக்கிளையின் 16வது திட்ட மாநாடு

வேலூர் மின் திட்ட கிளையின் 15வது திட்ட மாநாடு தோழர் தருமன் தலைமையில் வேலூரில் நடைபெற்றது. தோழர் எஸ்.அம்பிகாபதி துவக்க உரையாற்றியானார். வேலை அறிக்கையை தோழர் எம். கோவிந்தராஜ் அவர்களும், வரவு- செலவு அறிக்கையை தோழர் டி.ஜெகனும் சமர்ப்பித்தனர். மாநாட்டை வாழ்த்தி விவசாய சங்க முன்னாள் தலைவர் தோழர் தயாநிதி,பொறியாளர் அமைப்பின் மாநில செயலாளர் கோபிநாத், ஓய்வு பெற்றோர் அமைப்பின் மாநில நிர்வாகி தோழர் தாமோதரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக மாநாட்டை நிறைவு செய்து மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் நிறைவுரையாற்றினார்.

மாநாட்டில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக தோழர் எம்.கோவிந்தராஜ், செயலாளராக தோழர் டி. ஜெகன், பொருளாளராக தோழர் எம். சின்னதுரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



# 14.06.2022 அன்று NTPL அனல் மின் நிலையம் முன்

# காத்திருக்கும் போராட்டம்

தூத்துக்குடி நகரத்தில் துறைமுக வளாகத்தில் 2X500 MW மின் உற்பத்தி செய்யும் NTPL அனல் மின் நிலையம் இயங்கி வருகிறது. இம்மின் உற்பத்தி நிலையம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் NLC தமிழ்நாடு மின் உற்பத்தி ஊழியர்கள் பணியின் போது (TANGEDCO) இணைந்து 89:11 என்கிற விகிதத்தில் கூட்டு நிறுவனமாக செயலாற்றி வருகிறது.TANGEDCO உற்பத்தி யில் இம்மின் உற்பத்தி நிலையம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் (NLC) துணை நிறுவனமாக செயலாற்றி வருகிறது.

18.06.2015 முதல் முதலாவது யூனிட் வர்த்தக ரீதியில் செயல்பட துவங்கியது. 29.08.2015 முதல் இரண்டாவது யூனிட் வர்த்தக ரீதியில் செயல்பட துவங்கியது. 2015 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து அனல் நிலையத்தில் 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

தூத்துக்குடி நகரத்தில் துறைமுக வளாகத்தில் ஆயிரம் மின் உற்பத்தி செய்யும் அனல் நிலையம் இயங்கி வருகிறது.

இம்மின் நிலையம் 2015 ஆம் ஆண்டில் 1000 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கட்டுமான பணியின் போது விபத்தில் மரணமடைந்த 10-க்கும் மேற்பட்ட வெளிமாநில தொழிலாளர்களுக்கு மத்திய அமைப்பும், CITUவும் தலையிட்டு உரிய நிவாரணம் பெற்று தந்துள்ளது.

தற்போது இம்மின் நிலையத்தில் 150 நிரந்தர தொழிலாளர்கள் NLC அனல் மின் நிலையத்தில் இருந்து பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றனர். 1200-க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் அத்து கூலிகளாக அடிப்படை உரிமை ஏதும் அளிக்கப்படாமல் கொத்தடிமையாக பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக கடந்த 02.04.2018-ம் ஆண்டு துணைத்தலைமை தொழிலாளர் ஆணையர் (நடுவண்) அவர்கள் முன்னிலை யில் சமவேலைக்கு சமஊதியம் வேண்டி தொடரப்பட்ட வழக்கில் கடந்த 30.04.2021 அன்று ஒப்பந்த தொழிலாளர் சட்டம் 1-ன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள துணை தலைமை தொழிலாளர் ஆணையர் (நடுவண்) அவர்கள் NTPL அனல் மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு NLC ஒப்பந்த தொழி லாளர் ஊதியம் வழங்க தீர்வம் No.M.20/1/2019-B1 Date: 30.04.2021 மூலம் பரிந்துரைக் கப்பட்டது.

குறைந்தபட்ச கூலி சட்டத்தின் அட்டவணையில் வராத தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்கள் என்கிற அடிப்படையில் NTPL அனல் மின் நிலையத் தில் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு 01.06.2021 முதல் மேற்படி தீர்வத்தின் அடிப்படையில் துணை தலைமை தொழிலாளர் ஆணையர் (நடுவண்)அவர்கள் நிர்ணயித்த ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கி

மறுத்து NTPL அனல் மின் நிலைய நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது. மேல் முறையீடின் மீது உயர்நீதி மன்றம் இடைக்கால நிவாரணமாக ரூ.100/- தினசரி வழங்க உத்திரவிட்டது. இந்த தீர்ப்பின் மீது தடை உத்திரவு பெற்ற NTPL அனல் மின் நிலைய நிர்வாகம் வழக்கை நடத்தாமல் காலம் தாழ்த்துகிறது.

மத்திய தொழிலாளர் நலத்துறையின் உத்திரவுகளை கூட அமல் படுத்தாமலும் பணியாற்றுகின்றவர்களுக்கு சட்டத்தில் சொல்லப்பட்ட ஊதியம், பணி நிரந்தரத்திற்கான எந்தவித நடவடிக்கை எடுக்காத இந்நிறுவனம், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் பணித் தொடர்ச்சியுடன் வேலை கோட்டு மண்டல தொழிலாளர் ஆணையர் (நடுவண்) தொழிலாளர் ஆணையர் அலுவலகம் மதுரை அவர்கள் முன்னிலையில் எழுப்பிய தொழிற்தாவாக்களில் NTPL அனல் மின் நிலைய மனிதவள அதிகாரிகள் (HR) ஒப்பந்த நிறுவனங்களுக்கு ஆதரவாக வாதாடுவது அல்லது நிறுவனங்களுக்கான பதிலுரை தயாரித்து வழங்குவது என முன்னுதாராண நவரத்னா நிறுவனமான NTPL எவ்வித சமூக அக்கறையுமின்றி முழுக்க முழுக்க தொழிலாளர் நலதுறைக்கு எதிராக ஏழை எளிய தொழிலாளர்களுக்கு எதிரான மனோபாவத்தில் செயல்பட்டு வருகிறது.

ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் சேர்க்க ரூபாய் 2 லட்சம் முதல் 5 லட்சம் வரை லஞ்சமாக பெறப்படுகிறது. NTPL நிறுவனத்தின் HR துறை அனுமதியோடு மேற்படி லஞ்ச லாவண்யம் நடத்தப்படுகிறது.

தேசிய விடுமுறை மற்றும் பண்டிகை விடுமுறைகளுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு பல நிறுவனங்களில் மறுக்கப்படுகிறது. எனவே ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட தேசிய விடுமுறை மற்றும் பண்டிகை விடுமுறை சம்பளத்துடன் நிலுவை தொகையுடன் வழங்க வேண்டும்.

பணியிடத்தில் இருந்து வெகுதூரத்தில் மத்திய அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சில கழிவறைகளை ஒப்பந்த தொழிலாளர்கள் பயன்படுத்த வேண்டிய நிலை NTPL அனல் மின் நிலையத்தில் உள்ளது. இதனால் பெண் தொழிலாளர்கள் உட்பட அனைவரும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி உள்ளாகின்றனர். NTPL அனல் மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர் களுக்கு போதுமான கழிவறைகள் வசதி செய்து தர வேண்டும்.

நிரந்தரம் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் என்பவர் 1500 பேர் பணிபுரியும் NTPL அனல் மின் நிலையத்தில் உள்ள தனியார் அமைப்பால் நிறுவப்பட்டுள்ள கேண்டினில் ஒப்பந்த தொழிலாளர்கள் அமர்ந்து உணவருந்த போதுமான வசதிகள் இல்லாததால் கூட்ட நெரிசலும், அதிகமான நேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கு மானியத்துடன் கூடிய கேண்டின் வசதி செய்து தர வேண்டும்.

சுமார் 200-க்கும் மேற்பட்ட பெண் ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரியும் NTPL அனல் மின் நிலைய வளாகத்தில் பெண் ஊழியர்களுக்கான ஓய்வறை கிடையாது. பெண்களுக்கு தனியான ஓய்வறை அமைத்து தர வேண்டும்.

மத்திய அமைப்பு சார்பாக NTPL அனல் மின் நிலைய வளாகத்தில் கோரிக்கை நிறைவேறும் வரை காத்திருக்கும் போராட்டம் 14.06.2022 அன்று காலை துவங்கி 15.06.2022 மாலை 6.00 மணி வரை நடைபெற்றது. தூத்துக்குடி வருவாய் வட்டாட் சியர் மற்றும் காவல்துறை தலையிட்டதன் பேரில் அவர்கள் முன்னிலையில் NTPL அனல் மின் நிலைய மனிதவள அதிகாரிகள் (HR) மற்றும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியு) நிர்வாகிகள் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது.

- எஸ். அப்பாதுரை
தூத்துக்குடி

**தமிழ்நாடு மின்ஊழியர்**
**மத்திய அமைப்பின்**
17வது மாநில மாநாட்டை முன்னிட்டு

## சிறப்பு கருத்தரங்கம்

**18.07.2022** மாலை 5.30 மணிக்கு
ராஜாஅண்ணாமலை மன்றம்,
சென்னை
(உயர்நீதிமன்றம் அருகில்)
**அனைவரும் பங்கேற்பீர்**

# நுகர்வோரின் விவரங்களை தனியார் ஏஜென்சியிடம் ஒப்படைப்பதை கைவிடுக!

மின்சார வாரியத்தில் கணினி தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டு இன்றைக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. மின் நுகர்வோரின் அனைத்து விவரங்களும் நமது மின் வாரியத்தால் பல கோடி ரூபாய் செலவு செய்து உருவாக்கப்பட்டது.

மின்னகம் என்று ஒன்று உருவாக்கி தனியாரிடம் கொடுக்கின்ற பொழுதே 3 கோடியே 19 லட்சம் மின் நுகர்வோரின் விவரங்கள் மின்னகத்தை நிர்வகிக்கின்ற தனியார் ஏஜென்சி கைவசம் சென்று விட்டது.

தற்போது மின்வாரியம் தகவல் தொழிற்நுட்ப பிரிவின் மூலமாக உருவாக்கப்பட்ட பல கோடி ரூபாய் மதிப்புள்ள வாரியத்திற்கு சொந்தமான தரவுகளை தனியாரிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.இது கடுமையான தீங்கு விளைவிக்கும் என்பதை கருத்தில் கொள்ளாமல் உள்ளனர்.

அண்ணா பல்கலை கழகம், C-DAC ( Centre for Development of Advanced Computing), TNeGA ( Tamilnadu e - Governance Agency), போன்ற மூன்று அரசு ஏஜென்சிகளிடம் கருத்துக்கள் கோரிய பொழுது வாரிய முக்கிய தரவுகளை தனிநபர் ஏஜென்சிக்கு கொடுப்பது சரியில்லை எனவும், ஆபத்தை விளைவிக்கும் என கருத்து தெரிவித்தும், அதை புறந்தள்ளி தனியார் ஏஜென்சியிடம் வாரிய தகவல் தொழிற்நுட்ப தரவுகளை கொடுக்க நினைப்பதன் நோக்கம் என்னவோ?

தனியார் ஏஜென்சிகள் தரவுகளை பயன்படுத்தி மின் கட்டணம், மின் அளவீடு போன்றவற்றில் கை வைக்கலாம். தற்போது வங்கி கணக்கில் எவ்வாறு சில தனியார் நபர்களால் PAN, ATM Card Number-கள் கோரும் பொழுது, அறியாமல் தந்து மாட்டிக்கொள்கிறோமோ அது போலத்தான், இதிலும் நடக்கலாம்.

அவ்வாறு நடந்தால் மின் ஊழியர்கள் -நுகர்வோர் மோதலை தான் உருவாக்கும். தற்போதுள்ள நமது சிஸ்டத்திலேயே பல்வேறு இடங்களில் தற்போது ஏற்படும் தவறுகளை நாம் உடனே கண்டு பிடித்து சரி செய்து விடுகிறோம்.

**இந்த தரவுகள் தனியாரிடம் சென்றால் மின்நுகர்வோரின் அலைபேசி முகவரிகளை பயன்படுத்தி யார் வேண்டுமானாலும் தங்களுடைய நிறுவனம், மற்றும் அரசியல் கருத்துக்களை கொண்டு செல்வதற்கு தனியார் கம்பெனிகள் வழிவகை செய்யும்.**

எனவே வாரிய நிர்வாகமே!
மறுபரிசீலனை செய்திடு!
வாரிய தரவுகளை தனியாரிடம்
கொடுக்காதே!



## வாழ்த்துகிறோம்

மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினரும், மின்துறை பொறியாளர் அமைப்பின் மாநில அமைப்புச் செயலாளருமான தோழர் கே. ஜீவானந்தம் அவர்கள் 30.6.2022 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். வாழ்த்துக்கள்.




தோழர் டி. அன்பழகன், சிறப்பு நிலை முகவர், ஐ.டி.சி. கோட்டம், எம்.சி.என். பிரிவு, தென்சென்னை 2 கிளையின் துணைத் தலைவரும், மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினராகவும், சிறப்பாக பணியாற்றி 30.6.2022 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தடைகளை தகர்த்து சாதனை தடம் பதித்த கேங்மேன் போராட்டம்!

கேங்மேன் பணியாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகள் முன்வைத்து முதற்கட்ட இயக்கம் துவங்க வேண்டுமென்று திருச்சியில் நடைபெற்ற மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழுவில் முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக ஒப்பந்த ஊழியர்கள், அடுத்து பகுதிநேர பணியாளர் பங்கேற்ற இயக்கங்கள் வெற்றிகரமாக நடந்தேறியது.கேங்மேன் பணியாளர்களின் தனித்த இயக்கம் காண்பது என்ற திருச்சி பொதுக்குழு முடிவின்படி 10.06.2022 அன்று மின்வாரிய தலைமையகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் 2000-க்கும் மேற்பட்ட கேங்மேன் பணியாளர்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டு தங்களது கோபத்தையும், வேகத்தையும் வெளிப்படுத்தி னார்கள். கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கோவையை சேர்ந்த தோழர்கள் கார்த்தியேன், யுவராஜ், லோகநாதன், ஆகியோரும் திரு வண்ணாமலை மின் வட்ட கிளைகளிலிருந்து தோழர்கள் வினோத் மற்றும் ஆனந்தன் அகியோரும், கிருஷ்ணகிரி கிளையிலிருந்து தோழர் ராஜா தேசிங்கும், கேங்மேன் பணியாளர்களின் துன்பதுயரங்களை விளக்கி பேசினர். 2000 கேங்மேன் தொழிலாளர்கள் கலந்து கொண்டது நல்ல விஷயம் எதிர்பார்த்த ஒன்று தான். ஏனெனில் ஏற்கனவே மின்வட்டக்கிளை வாரியாக அறிவித்த எண்ணிக்கையில், நமக்கு எதிராக செயல்பட்ட நிர்வாகம், பிரிவு பொறியாளர்கள் முதல் முகவர்கள் வரை ஊழியர்களை பயமுறுத்தி இல்லாத பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு அவர்கள் சென்னைக்கு வராமல் தடுத்திருக்கிறார்கள் என்ற உண்மை பிறகு தான் நமக்கு தெரிந்தது.சிஐடியு சங்கத்திற்கு எதிராக களம் கண்ட இவர்கள் ஒரு போதும் வெற்றிபெற இயலாது. தடைகளை தகர்த்து கவன ஈர்ப்பு போராட்டத்தால் கலந்து கொண்ட 2000 கேங்மேன் ஊழியர்கள் 9613 கேங்மேன் ஊழியர்களுக்கு தகவல் கொடுப்பார்கள், நடந்ததை கூறுவார்கள், அடுத்தக்கட்டப் போராட்டத்திற்கு அனைவரையும் அழைத்து வருவார்கள். அடுத்த கட்ட போராட்டம் தமிழகமே திரும்பி பார்க்கின்ற அளவிற்கு கேங்மேன் ஊழியர்கள் சிஐடியு சங்க தலைமையின் கீழ் நடத்துவார்கள்.

பலருக்கு கேங்மேன் பணியாளர்களை மனதளவில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அதற்கு காரணம் கேங்மேன் பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் சிஐடியு சங்கத்தில் உள்ளனர். ஒரு சில இடங்களில் உதவி பொறியாளர் மற்றும் முகவர் அவர்களின் கட்டாயம் காரணமாக சந்தா அளிக்காமல் இருக்கலாம். 10.06.2022 இயக்கத்திற்கு வராமல் இருந்திருக்கலாம். ஆனால் மனதளவில்

உணர்வு பூர்வமாக அவர்கள் சிஐடியு சங்கத்துடன் நெருங்கி இருக்கிறார்கள் என்பது விரைவில் உணர்வார்கள். கேங்மேன் பணியாளர்களுக்கு ஊர்மாறுதல், காலமுறை ஊதியம், உள்முகத் தேர்வில் மற்றும் களஉதவியாளர் பணி மாற்றம் ஆகியவற்றை பெறஇயலாது என்று ஒரு சிலர் பொய்யான விஷமத்தனமான செய்திகளை பரப்பி வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் விரைவில் மத்திய அமைப்பு பாடம் கற்றுகொடுக்கும். மின்வாரியத்தின் வரலாற்றை புரட்டிப்போட்டது மத்திய அமைப்பு. இதை தெரிந்து கொள்ளாத ஒரு சிலர் கேங்மேன் பணியாளர்கள் மத்தியில் பொய் பிரச்சாரம் செய்வது கானல்நீராய் மாறிப்போகும்.

10.06.2022 அன்று நடைபெற்ற கேங்மேன் பணியாளர்களின் போராட்டம் மின் ஊழியர்கள் மத்தியில் நிர்வாகத்தரப்பில் பேசும் பொருளாய் மாறி உள்ளது. 9613 கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கைகளை இனி மேலும் காலந்தாழ்த்த முடியாது. காலம் தாழ்த்தினால்2000 கேங்மேன் என்ற எண்ணிக்கை 7000 கேங்மேன்களாக வெடித்து சிதறும் போராட்டமாக மாறும் என்று நிர்வாகம் உணர்ந்துள்ளது. கேங்மேன் கோரிக்கைகள் விரைந்து பரிசீலனை செய்து உத்தரவாக வெளிவரும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. இதற்கு காரணம் 10.06.2022 கேங்மேன் போராட்டமும் அவர்களின் ஒற்றுமையும், கோடைகாலம் முடிந்து விட்டது. அடுத்த சில மாதங்களில் மழைக்காலம் துவங்க உள்ளது. மின்வாரியத்தை,தாங்கிப்பிடிக்கும் கேங்மேன் ஊழியர்கள் சிஐடியு தலைமையில் போராட்டம் நடத்தினால் என்னவாகும் என்று நிர்வாகம் நன்கு அறியும். நமக்கும், மின்வாரியத்திற்கும், மக்களுக்கும் தொல்லை தருவது என்ற நோக்கம் அறவே கிடையாது. அதே நேரம் கேங்மேன் பணியாளர்களின் ஊர்மாற்றம் உள்ளிட்ட அடிப்படை கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இரண்டாண்டுகள் பயிற்சி காலம் என்பதும் ரூ.15,000/- தொகுப்பூதியம் என்பதும் அப்பட்டமான ஒப்பந்த மீறல்.இதை வாரியம் பரிசீலனை செய்து பயிற்சி காலத்தை மூன்று மாதமாக குறைத்து காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும். நிலையாணைகள் சட்டப்படி அனைத்து ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் கேங்மேன் பணியாளர்களுக்கும் கிடைக்க வேண்டும். நிதிப்பற்றாக் குறை என்று சொல்லி உழைப்புச் சுரண்டல் செய்வதை நாம் ஒரு போதும் ஏற்க மாட்டோம்.

10.06.2022 அன்றைய போராட்டத்தில் கலந்து கொண்ட கேங்மேன் பணியாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள் தடைகளை தாண்டி மிரட்டல்களுக்கு அஞ்சாமல் நிர்வாகத்தின் எந்த நடவடிக்கையையும் ஏற்க தயார் என்று போராட்டத்தில் கலந்து கொண்ட உங்களது செயல் மின் வாரிய வரலாற்றில் தடம் பதித்துள்ளது. உங்களது கோரிக்கைகள் விரைவில் நிறைவேறும். ஆகஸ்ட் 12,13 மற்றும் 14 தேதிகளில் மத்திய அமைப்பின் மாநில மாநாடு சென்னை பெரியார் திடலில் நடக்க உள்ளது. மாநாட்டிற்கு முன்பாக உங்களது கோரிக்கைகள் நிறைவேறும் என்று நம்புகின்றோம். அவ்வாறு நிறைவேறவில்லை என்று சொன்னால் கேங்மேன் ஊழியர்களின் அடுத்தக்கட்ட போராட்டம் மாநில மாநாட்டு முடிவாக அறிவிக்கப்படும். அந்த போராட்டம் மின்சார வாரியத்தையும், அரசாங்கத்தையும் அசைத்தும் பார்க்கும் போராட்டமாக மாறும். அது வரை பொறுத்திருப்போம்!

மாநில மாநாட்டு பேரணிக்கு திரளாய் வாருங்கள் மாநாட்டு பேரணி கேங்மேன்களின் குரல் ஒலிக்கட்டும் வாரியமும், அரசும் அசையட்டும்..

Com.**T.J**



தோழர் **எம். கோவிந்தசாமி,**
முகவர் 2ம் நிலை, கரிஅரவை கோட்டம்,
மேட்டூர் அனல் மின்நிலையம் 1, அவர்கள்
31.5.2022 அன்று வாரியப் பணியிலிருந்து
ஓய்வு பெற்றார் மின்கதிர் நன்கொடையாக
ரூ. 1000/- தோழர் எஸ். பிரகாசம் மூலமாக
அளித்தார். வாழ்த்துக்கள்.

# பணியின் போது விபத்து மரணம்!

மின் ஊழியர்கள் பணியின் போது விபத்து ஏற்பட்டு மரணம் அடைவது தொடர் கதையாக உள்ளது. அதிலும் இடைநிலை ஊழியர்கள் மரணம் அவர்களின் குடும்பத்தை நிலை குலைய செய்கிறது. இதை உணர்ந்த நாம் அவர்ளின் நிலையை கருத்தில் கொண்டு பல்வேறு சலுகைகளை பெற்றுத்தந்தோம். அதில் ஒன்று மின்வாரிய பணியாளர் மின் விபத்தில் இறந்தால் ரூபாய் 25,000/- ஈமச்சடங்கு செய்வதற்கு வழங்கிட வேண்டும் என்று நமது கோரிக்கையை ஏற்று மின்வாரிய உத்திரவு எண் 16 நாள் 11.02.2021 அன்று வழங்கப்பட்டது இந்த உத்தரவு புதியதாக 2021-ம் ஆண்டு பணி ஏற்ற கேங்மேன் பணியாளர்களுக்கும் பொருந்தும். இந்த தொகை அவருக்கு சேர வேண்டிய பணத்திலிருந்து கழிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதற்கு Special Grant For funeral Expenses என்ற வகையில் இது வழங்கப்படுவதாக வாரியம் அறிவித்துள்ளது. இந்த உத்தரவை நமது நிர்வாகிகள், அணிகள், பணியாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

TANGEDCO/TANTRANSCO - Fatal Accident - Departmental Staff - Special Gred for Funeral day expenses to be sanctioned to the employees irrespective of cadre – Orders issued.

**( Administrative Branch)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.16** dated :11.02.2021.

Thai : 29, Saarvari Varudam,
Thiruvalluvar Aandu 2052.

**READ:-**

1) Circular Memo.No.108958/1497/G35/G351/2012-6, dt.15.12.2014.
2) CMD note approved dt.08.02.2021.

**PROCEEDINGS:-**

As per the Circular Memo cited, order has been issued to sanction the funeral expenses amount of Rs.5,000/- with effect from 18.01.2010 for the Fatal Accident.

2) The employees as well as the Unions have represented to consider and pay Special Grant for Funeral day expenses to the dependents to meet out the funeral expenses irrespective of cadre. They have requested to enhance the said compensation amount to Rs.25,000/-.

3) As a gesture of goodwill, CMD/TANGEDCO has approved the proposal accordingly. Hence it is hereby ordered that the "Special Grant for Funeral day expenses" for a sum of Rs.25,000/- (Rupees Twenty five thousand only) be paid to the dependents of the employees of TANGEDCO/TANTRANSCO irrespective of cadre due to fatal accident while on duty. The amount shall not be adjusted/recovered in the future payments due for the deceased.

4) The power is delegated to the Superintending Engineers to sanction and disburse the “Special Grant for Funeral expenses” amount to the dependents of the employees on the day of death/funeral. The date of implementation of order will be effect from 08.02.2021 The expenditure is debitable to the head of A/c No. 75.715 .

5) The receipt of the Proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR/TANGEDCO)**

( D.RAVICHANDRAN )

**CHIEF ENGINEER/PERSONNEL**



# பெண்களுக்கு நீதிகேட்டு நடந்த போராட்டம் வெற்றி!

தெற்கு சென்னை மின் வட்டம் - 2, தாம்பரம் கோட்டம் கடப்பேரி உபகோட்டத்தில் பணிபுரியும் மத்திய அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் மீது பாலியல் சீண்டல் செய்து தகாத வார்த்தைகளை பயன்படுத்தி அச்சுறுத்தி வந்த ஊழியர் மீது மார்ச்சு 1 அன்று தாம்பரம் செயற்பொறியாளர் அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. புகாரை விசாரிக்காமல், புகாரை காலம் தாழ்த்தும் எண்ணத்துடன் தாம்பரம் கோட்ட நிர்வாகம் செயல்பட்டது. இதனையடுத்து மேற்பார்வை பொறியாளர் தெற்கு சென்னை-2 அவர்களிடம் பொதுச்செயலாளரும், தெற்கு மண்டல செயலாளரும் நேரில் சென்று மேற்பார்வை பொறியாளரை சந்தித்து புகார் மனுவின் மீது நடடிவக்கை எடுக்கக்கோரி அழுத்தம் கொடுத்தனர். ஆனால் திட்ட நிர்வாகம் நமது கோரிக்கையின் மீது அலட்சியம் காட்டியது. இதனை உணர்ந்த கிளை நிர்வாகிகள் 14.03.2022 அன்று நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டி மறுநாளே ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 15.03.2022 அன்று காலை ஊழியர்களை திரட்டி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காலையில் துவங்கி மதியம் 2 மணி வரை நிர்வாகம் நமது கோரிக்கைளுக்கு செவிசாய்க்காத காரணத்தினால் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தின் வராந்தாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் முற்றுகை போராட்டம் செய்தனர். இந்த போராட்டத்திற்கு மத்திய அமைப்பின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் தலைமை ஏற்று வழி காட்டினர். இறுதியில் நமது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து பாலியல் தொல்லை கொடுத்த பணியாளரை பணியிடை நீக்கம் செய்து ( Suspension) உத்தரவு வழங்கியது. அதன் நகல் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. அதன் பிறகு ஐந்து நாட்கள் கழித்து பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்தது திட்ட நிர்வாகம். உத்திரவை ரத்து செய்தது தவறான முன் மாதிரியாகும் என்றும் பெண்கள் வன்கொடுமை சட்டத்தின்படி தவறானது என்றும் தலைமை பொறியாளர் தெற்கு மண்டலம் அவர்களிடமும், மின்வாரிய தலைவரிடமும் கடிதம் அளித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். வாரிய தலைவரும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்கள். இடைப்பட்ட காலத்தில் பணியிடை நீக்க ரத்து உத்திரவை Revocation செய்து அதே இடத்தில் பணியேற்க செய்தது தெற்கு சென்னை-2 திட்ட நிர்வாகம். பணியிடை நீக்க உத்தரவை ரத்து செய்ய வைத்தது தவறு என நாம் மீண்டும் நிர்வாகத்திடம் கடிதம் அளித்து பேசினோம். இந்த நிலையில் நிர்வாக உத்திரவின் அடிப்படையிலும் பெண்கள் பாதுகாப்பு தொடர்பாகவும், விசாகா கமிட்டி பரிந்துரையின் அடிப்படையிலும் தெற்கு சென்னை மண்டல பொறியாளர் மற்றும் தெற்கு சென்னை-2 மேற்பார்வை பொறியாளர் அவர்களின் நடவடிக்கைகளின் மீது திருப்தி இல்லாத காரணத்தினால் நாம் மேல் நடவடிக்கைக்கு செல்ல வேண்டிய தேவை எழுந்தது.

இந்த நிலையில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கன்வீனர் தோழர் எம். தனலட்சுமி மூலமாக மாநில மகளிர் ஆணையத்திடம் புகார் மனு அளிக்கப்பட்டது. மாநில மகளிர் ஆணையம் புகாருக்குண்டான நபரை இடமாற்றம் செய்ய வேண்டி அழுத்தம் தந்தது. அதனடிப்படையில் வாரிய தலைவர் புகாருக்குக்குண்டான நபரை தெற்கு சென்னை-1 வட்டத்திற்கு மாற்றம் செய்து உத்திரவு வழங்கினார். இந்த உத்தரவையும் அரசியல் அழுத்தம் காரணமாக ஒரு சிலர் நிறுத்தினார்கள். வட்ட நிர்வாகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் பாலியல் குற்றம் செய்த நபரை நிர்வாகமும், ஒரு சில தொழிற்சங்கங்களும் பாதுகாத்தது என்பது விசாகா கமிட்டிக்கு நேர் எதிரான செயல் என்று அவர்களுக்கு தெரியவில்லை. விசாகா கமிட்டி என்ன என்பதும் அது தொடர்பான சட்டங்கள் என்ன கூறுகின்றது என்பது தெரியாமல் உள்ள வட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டிய கடமை நமதாக உள்ளது.

பாலியல் புகார் கமிட்டி பாதிக்கப்பட்ட இரு பெண்களை அழைத்து விசாரணை செய்தது. இது மட்டுமல்லாமல் எண்ணற்ற சாட்சியங்களையும் விசாரணை செய்தது. விசாரணையின் முடிவில் பாலியல் தீண்டல் செய்த கடப்பேரி பிரிவின் முகவர் செய்தது குற்றம் என்று விசாரணையில் நிருபிக்கப் பட்டுள்ளது. பாலியல் விசாரணைக் கமிட்டி பாலியல் தீண்டல் செய்தவரை போக்சோ சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கமிட்டி பரிந்துரை செய்தது.

மின் ஊழியர் மத்திய அமைப்பு மற்றும் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு எப்பொழுதும் பொய்யான புகார் மனுக்களை அளிக்காது. பொய்யான குற்றச்சாட்டுக்களை வைக்காது. நேர்மையானவர்களை தண்டிக்காது. நாம் எப்பொழுதும் சட்டத்தின் அடிப்படையில் வாரிய உத்தரவின் அடிப்படையில் நேர்மையை நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதே நமது குறிக்கோளாக உள்ளது.

பெண்களை பாலியல் தீண்டல் செய்பவர்களுக்கும்,பெண்களை தவறாக நினைப்பவர்களுக்கும். இது ஒரு பாடமாக அமையட்டும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறு செய்தாலும், நிர்வாக அதிகாரிகள், பொறியாளர்கள் தவறு செய்தாலும், தவறுக்கான தண்டனையை சட்டத்தின் மூலம் மின் ஊழியர் மத்திய அமைப்பு வாங்கிக்கொடுக்கும்.




## ஈரோடு மின்உற்பத்தி வட்டக் கிளையின் ஆண்டு பேரவை

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு ஈரோடு உற்பத்தி வட்டக் கிளையின் ஆண்டு பேரவை 29.05.2022 அன்று எல். செல்வநாதன் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைப் பொதுச் செயலாளர் வீ. இளங்கோ துவக்கி வைத்து பேசினார். வி. ரகுபதி, கே. சண்முகம், சுந்தரராஜன், சிங்கராயன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்.

மத்திய துணைப் பொதுச் செயலாளர் தோழர் கே. அருள் செல்வன் நிறைவுரை ஆற்றினார். புதியதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் தலைவராக பி.கே சிவக்குமார், செயலாளராக எல். செல்வநாதன், பொருளாளராக எம்.கே. மோகன் மற்றும் பி. அர்ச்சுணன், ஆர். வெங்கடாசலம், எஸ். முருகேசன், கே.என். அர்த்தநாரீஷ்வரன், கே. பழனிவேல், என். பாபு ஆகியோர் துணைத் தலைவராகவும். ஏ. பழனிசாமி, வி. கிருஷ்ணன், பெ.குமார், ஆர். சண்முகசுந்தரம், என். சிவக்குமார், எஸ். சுப்பிரமணியன் இணைச் செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

நாள்.07.06.2022
சென்னை-78.

**பாலியல் புகார் மீதான குழுவின் விசாரணை அறிக்கை**

திரு.J.ரமேஷ்பாபு, முகவர் முதல்நிலை/கடப்பேரி என்பவர் மீதான பாலியல் புகார் குறித்த விசாரணைக்கு 12.04.2022 அன்று

1. திருமதி. ஹெலன்தேவகிருபை, கணக்கீட்டு ஆய்வாளர், கடப்பேரி
2. திருமதி.S.பாரதி, வணிக ஆய்வாளர்/ நியூகாலனி
3. திரு.J.ரமேஷ்பாபு, முகவர் முதல்நிலை/கடப்பேரி

போன்றோர் முன்னிலையாகினர். அன்று திருமதி. ஹெலன்தேவகிருபை புகார்தாரர் (1) அவர்கள் Sexual Harassment of women at workplace Act, Section 12(a)ன்படி, புகாருக்குள்ளானவரை தனது பாதுகாப்பினை கருதி, பணியிடமாற்றம் செய்த பிறகே, தனக்கு நேர்ந்தவற்றை விளக்க முடியுமென கூறி, கோறிக்கை வைத்து சென்றார்.

புகார்தாரர் (2) திருமதி.பாரதி அவர்களும், தனது உடல்நிலை சரியில்லாததால், மற்றொரு நாள் விசாரணைக்கு பதிலளிப்பதாக கூறி, அவகாசம் கேட்டு சென்றார்.

புகாருக்குள்ளான திரு.ரமேஷ்பாபு, அவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது, "புகாரளித்தவர்களும் மற்றுமொரு ஆண் அலுவலரும் இணைந்து வெளியே Purchase சென்று வந்த சம்பவத்தை தான் கொச்சைப்படுத்தி பேசியதாக கருதி தன் மீது வீண் பழி போட்டுவிட்டதாக" கூறினார்.

புகார்தாரர் (2) திருமதி.பாரதி அவர்கள் கோரிய அவகாசம் கொடுக்கப்பட்டு, மீண்டும் 19.04.2022 அன்று அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் திரு.ரமேஷ்பாபு, அவர்கள் தன்னிடம் தவறான முறையில் ஒரு முறை அணுகியதாகவும் ஒரு தடவை தானும், அவ்வலுவலக பெண்கள் மற்றும் ஒரு ஆண் அலுவலர் இணைந்து வெளியே சென்றதை வைத்து, தான் இல்லாத சமயதத்தில் தன்னுடன் வந்த ஆண் அலுவலரிடம் தன்னை கொச்சைப்படுத்தி பேசியதாக கூறினார்.

இந்நிகழ்வை இதே நாளில் உடன் வந்த திரு.ஸிவட்சன் அவர்களும் சாட்சியாக கூறியதோடு புகாருக்குள்ளானவர் கூறிய வார்த்தைகளை விசாரணை குறிப்பிலேயே எழுதிதந்தார்.

புகார்தாரர் (1) அவர்கள் தனக்கு நேர்ந்த பாதிப்பினை குழுவில் கூறாது, அவரது கோரிக்கையை அப்படியே ஏற்க இயலாது என கருதிய குழு, அவருக்கு வாய்ப்பளிக்கும்படி Sexual Harassment of Women at Workplace Act, Section 12(b)ன்படி அவருக்கு "சிறப்பு விடுப்பிற்கு" பரிந்துரைத்து, அவ்விடுப்பில் விசாரணை மேற்கொள்ளலாம் என 22.4.2022 அன்று தலைமைப் பொறியாளர்/சென்னை மண்டலம்/தெற்கு அவர்களுக்கு இடைக்கால அறிக்கை ஒன்றை அளித்தது. அவர்களின் 06.05.2022 தேதியிட்ட கடிதத்தின்படி திருமதி. ஹெலன்தேவகிருபை அவர்களை 18.05.2022 அன்று விசாரணைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டது.

07/06/2022
Ec Member

ஆனால் குறித்த தேதியில் திருமதி..ஹெலன்தேவகிருபை விசாரணைக்கு முன்னிலையாகவில்லை. பின்னர் அனுப்பப்பட்ட கடிதத்தின்படி 31.05.2022 அன்று விசாரணைக்கு முன்னிலையானார்.

அன்றைய விசாரணையில் திரு.ரமேஷ்பாபு, அவர்களும் அவருக்கும் அலுவலக ரீதியாக எந்த தொடர்புமில்லை எனவும், கையெழுத்திட செல்லும் இடத்திலும் கை கழுவ செல்லும் இடத்திலும் மட்டுமே பார்க்க முடியுமெனவும், அவ்வாறு பார்க்க நேரும் சமயங்களில் தன்னை வக்கிரமாக பார்த்துக்கொண்டே இரட்டை அர்த்தத்தில் ஆபாசமாக பேசுவதாகவும் மற்றவர்களோடு உரையாடிக்கொண்டே பேச்சோடு பேச்சாக தன்னுடைய உடல் அங்கங்களை குறிப்பிடும் வகையில் பேசியதாகவும் கூறினார்.

இவ்வாறு ஆபாசமாக இரட்டை அர்த்தங்களோடு பேசிய நிகழ்வுகளை கூறும்போது தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக தான் முறைத்து பார்த்தவுடன் பேச்சை சாதுர்யமாக திருப்பி போட்டு பேசி தப்பிவிடுவார் எனவும் கூறினார்.

இப்புகார் குறித்த விசாரணைக்கு, தன்னுடைய பிரிவில் பணிபுரிபவர்களையும் சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்ற திரு.ரமேஷ்பாபு அவர்களின் (02.06.2022) கோரிக்கையை ஏற்று 07.06.2022 அன்று சில சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் அனைவரும், இப்புகார் பொய் புகாரென கூறினர்.

## குழுவின் இறுதி விசாரண அறிக்கை

புகார்தாரர்கள் கூறிய வாக்குமூலங்கள் அடிப்படையிலும், புகாருக்குள்ளானவரின் வாக்குமூலம் மற்றும் புகார்தாரர்களின் சாட்சியான திரு.ஸ்வீட்சன் அவர்களின் வாக்குமூலம் ஆகியவற்றை ஒப்பிட்டு பார்த்ததின் அடிப்படையிலும் புகாருக்குள்ளானவர் "இரட்டை அர்த்தத்தில்" ஆபாசமாக பேசியுள்ளார் என்பது குழுவிற்கு தெரிய வருகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் திரு.ரமேஷ்பாபு, அவர்களது பிரிவில் உடன் பணிபுரியும் திருமதி.வெள்ளையம்மாள் அவர்கள் திருமதி.விஜயலட்சுமி என்பவருடன் பேசும் ஆடியோ உரையாடல் அமைந்துள்ளது என்பதையும் குழு கருத்தில் எடுத்துக்கொள்கிறது.

மேற்படி புகாருக்குள்ளான திரு.ரமேஷ்பாபு,முகவர் முதல்நிலை/கடப்பேரி POSH Act 2013 Act 2 (iii) ன்படி Sexually coloured remarks எனும் வகையில் நடந்துகொண்டுள்ளார் என்று குழுவிற்கு தெரியவருகிறது.

எனவே, இந்த தவறான நடவடிக்கைக்கு POSH Act 13 (3) (i)ன்படி "to take action for sexual harassment as a misconduct in accordance with the provisions of the service rules applicable to the respondent" என்று குழு பரிந்துரை செய்கிறது.

மேலும், POSH Act 2013 Section (13) (4)ன்படி இக்குழுவின் பரிந்துரை கிடைத்த 60 (அறுபது) நாட்களுக்குள் அதன் மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Ec Member



# குழந்தைகளை கொண்டாடுவோம் - பாதுகாப்போம் சட்டம் அறிவோம்

**குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்**

- என்கிறது குறள்

இன்றைய குழந்தைகள் தான் நாளைய தலைவர்கள் குழந்தைகள் ஒரு புன்னகை நம் அத்தனை சோகத்தையும் மறக்கச் செய்யும் வல்லமை படைத்தது. வாழ்வின் அர்த்தம் குழந்தைகள் தான் அப்படிப்பட்ட குழந்தைகள் இன்று மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள்.கல்வி என்பது பெரும் சுமையாக உள்ளது. பொருளாதார சூழலில்ஆண், பெண் இருவரும் வேலைக்கு சென்று விடுவார்கள்.கூட்டு குடும்பமும் கிடையாது. தாத்தா, பாட்டி, உடன் இருப்பதில்லை. எல்லாம் பணி நிமித்தம் நகர்புறம் வந்துவிட்டார்கள். எனவே குழந்தைகள் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாக விட்டது. வேலைக்கு செல்லும் பெற்றோர் குழந்தைகள் PLAY SCHOOL மற்றும் காப்பகங்களில் விடப்படுகிறார்கள். இந்த சூழலில் குழந்தைகளின் முழுமையான பாதுகாப்பு என்பது போதுமானதாக இல்லை.

தினம்,தினம் செய்தித்தாள்களில் குழந்தைகள் பாலியல் ரீதியாக பாதிக்கப்படுவது வாடிக்கையாகி விட்டது. குழந்தைகளிடம் பகிரப்பட முடியாத சோகங்களும், அனுபவங்களும் நிறைந்து கிடக்கின்றன. அதை கேட்பதற்கு வீடுகளும், பள்ளிகளும், தாயாராக இல்லை என்பது தான் கசப்பான உண்மை அதிகமாக பேசாதே என்று வகுப்பறைகளும், வளவளனு பேசாதே என்று சமூகம் சொல்லிக்கொண்டே இருப்பதால் அவர்களிடம் அன்பாய் பேசுவது போல் நடித்தால் கூட குழந்தைகள் நம்பி விடுகிறார்கள். அதன் விளைவாக பாலியல் ரீதியான பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். குழந்தைகள் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டால் அவர்களை பாதுகாக்க கொண்டு வரப்பட்டது தான் போக்சோ சட்டம்.

போக்சோ சட்டம்

பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 போக்சோ ( PROTECTION OF CHILDREN FROM SEXUAL OFFENSES) POCSO - 2012 இந்தியாவில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க 2012-ல் மே 22-ம் தேதி மக்களவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். 18வயத்திற்கு குறைவாக உள்ள அனைத்து குழந்தையகம் பாலின வேறுபாடு இல்லாமல் அதாவது பெண் குழந்தைகள் மட்டுமல்ல ஆண் குழந்தைகள் பாதிக்கப் பட்டாலும் இச்சட்டம் தலையீடு செய்யும்.

இந்திய தேசிய குற்ற ஆவண காப்பாகத்துறை 2020-ல் வெளியிட்ட தரவுகளில் இந்த சட்டத்தின் கீழ் பதிவான குற்றங்கள் 35.3 % என்று சொல்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் 8% என்று ஆய்வு சொல்கிறது. பாலியல் ரீதியாக தொந்தரவு செய்வது, ஆபாச படம் எடுப்பது போன்றவை இந்த குற்றங்கள்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வழங்க சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்த குற்றங்கள் நடப்பது தெரிந்தும் அதுபற்றி புகார் தெரிவிக்காமல் மறைத்தால் கூட அந்த செயலுக்கு ஆறுமாத சிறை தண்டனை மற்றும் அபராதமும் உண்டு.

காவல் துறையிடம் பாலியல்

தொந்தரவு புகார் அளிக்கப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட சிறாரின் அடையாளத்தை, பெயரை பாதகாக்க வேண்டிய பொறுப்பு அந்த புகாரை விசாரிக்கும் அதிகாரியுடையதாகும். புகார் கிடைக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அது குறித்து குழந்தைகள் நலக்குழுவின் கவனத்திற்கு காவல்துறை கொண்டு செல்ல வேண்டும்.

**புகாரை எப்படி கொடுப்பது**

பாலியல் தொந்தரவுக்கு ஆளாகும் சிறுவனோ, சிறுமியோ 18 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் புகாரை பாதிக்கப்பட்டவரோ, அவரது பெற்றோரோ, உறவினரோ, நண்பரோ அவர் படிக்கும் பள்ளியோ, தெரிவிக்கலாம். புகாரை நேரடியாகவோ, போக்சோ “E” பாக்ஸ் என்ற இணையப்பக்கம் மூலமாகவோ, அல்லது சிறார் இலவச தொலைப்பேசி உதவி எண் 1098 மூலமாகவும் தெரிவிக்கலாம்.

2020- ஆம் ஆண்டில் போக்சோ சட்டத்தில் பதிவான குற்றங்களில் 99% பெண் குழந்தைகளுக்கு எதிரானவையாக உள்ளன. அதிகமாக பாதிக்கப்படும் பிரிவில் பெண் குழந்தைகளே இருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியம் அவர்களின் வீட்டிலோ அல்லது அவர்கள் விரும்புகிற இடத்திலோ பதிவுசெய்ய வேண்டும். இரவு நேரத்தில் குழந்தைகளை காவல் நிலையத்தில் வைத்துக்கொள்ள கூடாது. குழந்தை எதை எப்படி சொல்கிறதோ அதை அந்த வார்த்தையில் பதிவு செய்ய வேண்டும். குறுக்கு விசாரணை என்ற பெயரில் குழந்தைகளை சங்கடப்படுத்தக் கூடாது.

போக்சோ சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை பாலியல் சொந்தரவு செய்தால் குறைந்த பட்சம் 7 ஆண்டு சிறை தண்டனை அதிக பட்சம் ஆயுள் தண்டனை.

போக்சோ சட்டம் 5இ 6-ன்படி குழந்தை களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி யவர் குழந்தையின் பெற்றோர், பாதுகாவலர், காப்பக அலுவலர், ஆசிரியர், காவல்துறை அதிகாரி, சிறை ஊழியர் ஆக இருந்தால் குறைந்தபட்சம் 10 ஆண்டும் அதிக பட்சம் ஆயுள் தண்டனையும் அபராதமும் உண்டு.

காவல் துறையினர், பாதுகாப்பு படையினர், ராணுவம், அரசு அதிகாரிகள் போன்றவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் அவர்களே குழந்தைகளை பாலியல் தொந்தரவு செய்தால் அதிக தண்டனை உண்டு என்று சட்டம் சொல்கிறது.

சட்டம் கடுமையாக இருந்தாலும் மக்கள் நல்ல சிந்தனையுடன் இருந்தால் மட்டுமே குழந்தைகளை பாதுகாக்க முடியும். மலர்ந்து மணம் வீச வேண்டி மலர்கள் மொட்டாக இருக்கும் போது அழிக்கப் படுகின்றன.

புத்தகங்களே குழந்தைகளை இழித்துவிடாதீர்கள் என்று சொல்லும் அளவு பாடச்சமை அதைத்தாண்டி குழந்தைகள் விளையாட நேரமின்மை வீட்டில் பேசுவதற்கு ஆள் இல்லை.

நாம் செய்ய வேண்டியது குழந்தை களிடம் பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். நண்பனைப்போல் பழக வேண்டும். தனக்கு பிரச்சனை ஏற்பட்டால் முதலில் பெற்றோரிடம் சொன்னால் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும் விதத்தில் அணுகுமுறை இருக்க வேண்டும். குழந்தைகள் சொல்வதை காது கொடுத்து கேட்க வேண்டும். அவர்களோடு உரையாடாலை அதிகப்படுத்த வேண்டும்.

பாதுகாப்பு சட்டங்கள் இருக்கிறது. அதன் விவரங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். கடுமையான சட்டங்கள் இருந்தால் மட்டும் போதாது. சமுதாயமும் சட்டத்தை மதிக்க வேண்டும், பாராபட்சமின்றி அரசியல் தலையீடு இல்லாமல், நேர்மையான முறையில் நியாயம் கிடைக்க வேண்டும்.பணம் இருந்தால் நாம் தப்பித்து விடலாம் என்ற மனநிலையை மாற்ற வேண்டும். அதற்கு காவல்துறை, அரசியல்வாதிகள் நேர்மையும், கடுமையான தண்டனையுமே குற்றங்கள் தடுக்க வழிவகுக்கும்.

போக்சோ சட்டம் பற்றிய சரியான விழிப்புணர்வு அனைத்து மட்டத்திலும், கொண்டு செல்ல வேண்டும். நாளைய தலைவர்களை இன்றைய குழந்தைகளை கொண்டாடப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். சமுதாயப்பணியில் உள்ள தோழர்கள் பாதுகாப்பு சட்டங்களை தெரிந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

குழந்தைகளை குழந்தையாக வாழவிட வேண்டும். குழந்தைகள் தினத்தில் மட்டுமல்ல தினம், தினம் குழந்தைகளை கொண்டாட வேண்டும்.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளாக கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

-பாரதி

**- தஞ்சை தனலட்சுமி**

# இனி இதற்கெல்லாம் வரி உண்டு..
# ஜிஎஸ்டி கவுன்சில் எடுத்த முக்கிய முடிவுகள்!

**ஜிஎஸ்டி கவுன்சிலின் 47ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்.**

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் சண்டிகரில் இரண்டு நாள் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. கூட்டத்துக்கு பின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் பேசியபோது ஜிஎஸ்டி கவுன்சில் முடிவுகள் பற்றி விவரித்தார். கீழ்காணும் வரி விகிதங்கள் ஜிஎஸ்டி கவுன்சிலால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**வரி உயர்வு:**

எழுதுவதற்கான மை (writing ink), பிரிண்டிங் மை (printing ink), வரைவதற்கான மை (drawing ink) ஆகியவற்றுக்கான ஜிஎஸ்டி 12 விழுக்காட்டில் இருந்து 18ரூ ஆக உயர்த்தப்பட்டுள்ளது. LED லைட், லைட், ஃபிக்சர், உலோகத்தில் பிரிண்ட் செய்யப்பட்ட சர்கியூட் போர்டுகளுக்கு ஜிஎஸ்டி 12 % விழுக்காட்டில் இருந்து 18% ஆக உயர்வு. சோலார் வாட்டர் 'ஹீட்டர் மீதான ஜிஎஸ்டி 5 விழுக்காட்டில் இருந்து 12% ஆக உயர்வு. தோல்பொருட்கள் (leather goods), காலணிகள் தொடர்பான வேலைப்பாடுகளுக்கான ஜிஎஸ்டி 5 விழுக்காட்டில் இருந்து 12% ஆக உயர்வு. டெட்ரா பாக் (Tetra Pak) மீதான ஜிஎஸ்டி 12 விழுக்காட்டில் இருந்து 18% ஆக உயர்வு. வெட்டப்பட்ட மற்றும் பொலி ஊட்டப்பட்ட வைரங்கள் மீதான ஜிஎஸ்டி 0.25 விழுக்காட்டில் இருந்து 1.5 % ஆக உயர்வு.

பேக்கேஜ் செய்யப்பட்ட பிராண்டட் தயிர், மோர், லஸ்ஸி போன்ற பொருட்களுக்கு ஜிஎஸ்டி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் வழங்கும் செக் புத்தகத்துக்கு (Cheque Book) வசூலிக்கப்படும் தொகைக்கு 18ரூ ஜிஎஸ்டி விதிக்கப்படும். கத்தி, பேப்பர் கத்தி, பென்சில் ஷார்ப்னர், ஸ்பூன், ஃபோர்க், ஸ்கிம்மர், கேக் சர்வர் ஆகியவற்றுக்கு 18ரூ ஜிஎஸ்டி விதிக்கப்படும்.

மோட்டார் பம்ப், சைக்கிள் பம்ப், கிரைண்டர், மில்களில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு 18ரூ ஜிஎஸ்டி விதிக்கப்படும்.

**வரி குறைப்பு:**

ostomy, orthopedic கருவிகள் மீதான ஜிஎஸ்டி 12 விழுக்காட்டில் இருந்து 5% ஆக குறைப்பு. ரோப்வே (Ropeways) வழி பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து மீதான ஜிஎஸ்டி 18 விழுக்காட்டில் இருந்து 5ரூ ஆக குறைப்பு. டீசல் செலவு உள்பட லாரி, சரக்கு போக்குவரத்து வாகனத்துக்கான வாடகைக்கு ஜிஎஸ்டி 18 விழுக்காட்டில் இருந்து 12%· ஆக குறைப்பு.

**மற்றவை:**

பேட்டரி பேக் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எலெக்ட்ரிக் வாகனங்கள் மீதான ஜிஎஸ்டி 5% ஆக இருக்கும் என ஜிஎஸ்டி கவுன்சில் தெளிவுபடுத்தியுள்ளது. ஒரு நாளைக்கு 1000 ரூபாய் வரை வாடகை வசூலிக்கும் /ஹோட்டல் அறைகளுக்கு 12% ஜிஎஸ்டி விதிக்கப்பட வேண்டும் என ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரைத்துள்ளது. மேலும், ஒரு நாளைக்கு 5000 ரூபாய் வரை வாடகை வசூலிக்கும் மருத்துவமனை அறைகளுக்கு 5% ஜிஎஸ்டி விதிக்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது. தொலைக்காட்சி சேனல்களில் பங்கேற்கும் விருந்தினர் தொகுப்பாளர்களின் (Guest Anchors) சேவைக்கு ஜிஎஸ்டி விதிக்கப்பட வேண்டும் என ஜிஎஸ்டி கவுன்சில் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்நாடு நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜனின் அழைப்பை ஏற்று அடுத்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் ஆகஸ்ட் முதல் வாரம் மதுரையில் நடைபெறும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். **ஆக மொத்தம் இனி எதைப் பயன்படுத்தினாலும் GST வரி உண்டு.**

**பேசுவதற்குக் கூட GST போட்டு விடுவார்கள் அப்பு!** *(சத்தமாக சொல்லாதீர்கள் காதில் விழுந்து விடப்போகிறது. அப்புறம் ரூம் போட்டு யோசிப்பாங்க)*

## வாழ்க மணமக்கள்

தோழர் ஏ. பழநிவேல், சங்ககிரி கோட்டச் செயலாளர், ஈரோடு அவர்களின் மகன் பி. தங்கதுரை MSc., B.Ed., - ஜி. இந்து, B.E., இருவரின் திருமணம் 09.6.2022 அன்று நடைபெற்றது. மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் மணமக்களை வாழ்த்திய போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/- அளித்தார். **வாழ்க மணமக்கள்**

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சென்னை

பெறுநர் நாள்: 16.06.2022

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

**ஐயா, வணக்கம்**

**பொருள் : மின்வாரிய பணியாளர்களின் கோரிக்கைகள் மீது தங்களது மேலான தலையீடு கோருவது - தொடர்பாக**

தமிழக மின்வாரியத்தில் ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் என சுமார் 82,000 பேர் பணி புரிந்து வருகின்றனர். இவர்களது நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத, கீழ் கண்ட கோரிக்கைகள் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

1. மின்வாரிய பணியாளர்களுக்கு கடந்த 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட குழு ஒருமுறை கூட தொழிற்சங்கங்களை அழைத்து பேச தயாரில்லை. கொரானா தொற்றுநோய் காலத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்களை பலிகொடுத்து தடையில்லாத மின்சாரத்தை வழங்கியவர்கள் மின்வாரிய பணியாளர்களே. எனவே ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கி பணியாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.
2. வாரிய ஆணை எண் 2, நாள் 12.04.2022, மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் நலன்களுக்கு எதிராகவும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் இருப்பதால் இந்த வாரிய உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என முதலில் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

   கொரானா நோய் தொற்று காலத்தில் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு அரசின் துறைகளில்/ நிறுவனங்களில் புதிய பதவிகளை உருவாக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து வாரிய ஆணை 21 நாள் 23.07.2020-ன் மூலம் மின்வாரியத்திலும் வேலை பளு ஒப்பந்தத்தின் மூலம் வராத இடங்களுக்கு இந்த உத்தரவை அமல்படுத்தியது வாரிய நிர்வாகம். தற்போது வழங்கப்பட்ட வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022 மூலமாக நிதிச்சுமையை காரணம் காட்டி 23

வழிகளில் நடைமுறையில் பெற்று வந்த உரிமைகளை வாரிய நிர்வாகம் இந்த உத்தரவின் மூலம் பறித்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 01.07.1957-ல் உருவாக்குவதற்கு முன்பு தமிழக அரசின் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 01.07.1957-ல் மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு என மாற்றம் செய்யப்படுகின்ற பொழுது அரசு ஆணை G.O.MS. No. 538 PWED dated 25.02.1958 மற்றும் B.P No. 445 நாள் 26.04.1958 மூலம் இடைநிலை விதிமுறைகள் (TRANSITORY REGULATIONS) உருவாக்கி ஊழியர்களின் நல்வாழ்விற்கு வழிவகுத்தது.

அதே போல கடந்த 01.12.1996 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தம் 08.07.1998 அன்று ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் DEARNESS ALLOWANCE என்ற தலைப்பின் கீழ்

The Dearness Allowance Rates will be revised twice in a year On 1st January and 1st July Taking into account the Variations in the Perivious twelve Months Avearage All India consumer Price Index Numbers adopting the same formula as followed by the State Government.

மேலும் பணி ஓய்வுபெற்றவர்களுக்கு...

The Revised Pension scheme of the Government of Tamilnadu and any amendment there on from time to time will be applied to the Pensioners of the TNEB என குறிப்பிட்டுள்ளதையும் தற்போது உள்ள வாரிய நிர்வாக அலுவலர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே வாரிய ஆணை 2 நாள் 12.04.2022-ஐ ரத்து செய்ய வேண்டுகிறோம்.

3. மின்வாரியத்தில் 56,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ள நிலையில், அதை நிரப்பிட மின்வாரிய நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. கூடுதல் பணிச்சுமையோடு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

   தமிழக அரசின் முதன்மை நிறுவனமாக இருக்க வேண்டிய மின்வாரிய நிர்வாகம், காலிப்பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும் என்பது தான் பணியாளர்களின் எதிர்பார்ப்பு.

4. தற்போதைய மின்வாரிய நிர்வாகம் புதிய பதவிகளுக்கு அனுமதி தராமல் மின்வாரிய நிர்வாகமே தன்னிச்சையாக முடிவெடுத்து சில பொறுப்புகளை காலியாக்கி புதிய பொறுப்புகளுக்கு நியமனம் செய்வதை கைவிடுவதோடு வேலைபளு ஒப்பந்தத்தின் மூலம் உருவான புதிய பதவிகளுக்கும் புதியதாக உருவாக்கப்பட்ட மண்டல, வட்ட, கோட்ட பிரிவு அலுவலகங்களுக்கும் பதவிகளை அனுமதியளிக்க வேண்டும். Re-deployment முறையை கைவிட வேண்டும்.

5. வடசென்னை அலகு-3 மின் உற்பத்திக்கு தயாராகும் நிலையை எட்டவுள்ள நிலையில் முழுமையாக நிரந்தரத்தன்மை வாய்ந்த பணி என்பதை கணக்கில் கொள்ளாமல் அவுட்சோர்சிங் விடுவதாக அறிகிறோம். இது முற்றிலும் கைவிடப்பட வேண்டும்.

6. தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலமாக உருவாக்கப்பட்ட பலகோடி ரூபாய் மதிப்புள்ள வாரியத்திற்கு சொந்தமான தரவுகளை தனியாரிடம் ஒப்படைப்பது மின்வாரித்திற்கு

தீங்கு விளைவிக்கும். மூன்று ஏஜென்சியிடம் கருத்துக்கள் கோரிய பொழுது வாரிய முக்கிய தரவுகளை தனி நபர் ஏஜென்சிக்கு கொடுப்பது சரியல்லயெனவும், ஆபத்தை விளைவிக்கும் என கருத்துரு தெரிவித்த பின்பும், அதை மீறி வாரியம் தகவல் தொழில்நுட்பத்தை தனியாரிடம் ஒப்படைப்பது சரியல்ல. வாரிய நிர்வாகம் மறுபரிசீலனை செய்து தகவல் தொழில்நுட்ப பிரிவை பாதுகாக்க வேண்டும்.


7. மின்வாரியம் பொதுத்துறையாக செயல்பட்டு வரும் நிலையில் ஊழியர்களின் பணி நிலைமை மற்றும் ஊதிய திருத்தம் முறைப்படுத்துகின்ற வகையில் தொழிற்தகராறு சட்டம் 1947-ன்படி இருதரப்பு, முத்தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் முறைப் படுத்தப்பட்டு வருவதை மின்வாரிய நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லை.

   மேலும், அரசு ஆணை எண் 100 தொடர்பாக தொழிற்சங்கம் தொடுத்த வழக்கில் மின்வாரிய நிர்வாகம் ஊழியர்களின் பணி நிலைமையில் மாற்றம், ஊதியம், ஓய்வூதியம், பஞ்சப்படி உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் பாதுகாப்போம் என பதிவு செய்த பிரமானபத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததை மின்வாரிய நிர்வாகம் மதித்து தமிழக அரசின் உத்தரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.

8. மின்வாரியத்தின் நிதி இழப்பிற்கு பணியாளர்கள் எந்த வகையிலும் காரணம் அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நமது மின் உற்பத்தியை முழுவீச்சில் உற்பத்தி செய்தாலே இந்த செலவை சரிகட்ட முடியும். தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி, தொழிற்சங்கங்கள் தரும் ஆலோசனையை கணக்கில் கொண்டாலே நிதி ஒழுகலை தடுக்க முடியும்.

9. நிறுத்தி வைக்கப்பட்ட சரண் விடுப்பையும் மற்றும் ஜனவரி 2022 முதல் வழங்க வேண்டிய பஞ்சப்படியையும் வழங்கிட வேண்டும்.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களும் மேற்கண்ட எங்களது கோரிக்கைகளின் மீது நடவடிக்கை எடுத்து தீர்வு காணுமாறு பணிவுடன் (



## தொழிற் சங்கங்களுக்கு சந்தா மற்றும் நன்கொடை பிடித்தம் செய்ய தொழிலாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை விருப்ப கடிதம் சமர்பிக்கவும், அதே போல பிடித்தம் செய்ய வேண்டாம் என விரும்பும் தொழிலாளர்கள் கடிதம் சமர்பிக்க வகை செய்யும் வாரிய உத்திரவு

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI
CHENNAI-2.

**Memo. (Per.) No.18132/A16/A161/2022 -1, Dated: 27.06.2022.**

Sub : TANGEDCO - Union – Streamline of deduction of Annual subscription from the salary of the willing members of Unions – Reiterated – Orders – Issued.

Ref :
1. (Per) B.P (Ch) No.77 (SB), dt 28.03.2007.
2. (Per.) B.P. (Ch) No.111, (SB) dated 09.05.2007.
3. Secretariat Branch, Memo. (Per) No.39962/A3/A31/ 2020–1, dated:18.11.2020.
4. Secretariat Branch, Memo. (Per) No.43915/A3/A31/ 2020–1, dated:04.02.2021.
5. Secretariat Branch, Memo. (Per) No.43915/A3/A31/ 2020–4, dated:10.08.2021.

******

In the Boards Proceedings first cited, orders were issued for deduction of Annual Subscription and Donation from the salary of the willing employees of the Unions/Association, who make the specific request before the Board in this regard. In the standard terms and conditions annexed to the Board Proceedings second cited, it has been ordered that subscription shall be deducted from the pay bill for May payable in June and donation shall be deducted from the pay bill for November payable in December every year.

2. In the reference third cited, orders were issued for cancellation/dispensation of the scheme of deduction of Annual Union Subscription/Donation from the salary of the willing employees of the TANGEDCO and also ordered to cancel the Board's Proceedings first and second cited with immediate effect.

3. In the reference fourth cited, orders were issued reviving the scheme of deduction of Annual Subscription from the salary of the willing members of their unions and the members shall submit their willingness for deduction to only one membership fee. In the reference fifth cited, while reconsidering the cancellation order of deduction of Union

5. Therefore, it is hereby reiterated that the orders issued in the reference fifth cited prescribing the validity limit of 3 years of the willingness for recovery of annual Subscription/Donation be strictly adhered to and the Pay Drawing Officers are hereby directed that the Subscription/Donation shall be deducted only after obtaining of the willingness letter from the employee concerned and not based on the list submitted by the Unions/Association.

6. The receipt of the Memo.(Per) shall be acknowledged.

**A.MANIKKANNAN**
**SECRETARY**

# மின்வாரிய பணியாளர்கள் ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் நினைவுப் பரிசு வாங்க தொகை உயர்த்திய வாரிய உத்திரவு

**SECRETARIAT BRANCH**

**Memo. (Per.) No.16522/A19/A191/2022-1, dated 06.05.2022**

Sub : Establishment – TANGEDCO/TANTRANSCO/TNEB Ltd. – Issuing of Memento "Crest" to retiring employees – Cost of purchase of Memento "Crest" – Enhancement – Orders – Issued.

Ref :
1. Board's Memo. (Per) No.58749/O&M Cell/89-1, dated 16.08.1989.
2. Memo. No. 80008/O&M Cell (4)/90-1, dated 21.12.1990.
3. Memo. No. 80008/O&M Cell (4)/90-3, dated 23.03.1991.
4. Board's Memo. (Per) No.62953/A23/A232/2004-1, dated 08.10.2004.
5. Board's Memo. (Per) No.5381/A23/A232/2005-1, dated 25.01.2005.
6. Memo. (Per) No.111623/A23/A232/2004-1, dated 15.02.2005.
7. Memo. No. 79859/A23/A232/2005-1, dated 29.09.2005.
8. Memo. (Per) No.21228/A23/A232/2016-1, dated 08.06.2016.
9. From the Joint Director/Information & Public Relations/Chennai-2, U.O. No.JD/PR/Memento's/ D.No.154/2022, dated 02.05.2022.

*****

In the references first to sixth cited, orders have been issued as amended from time to time to honour the retiring employees of TNEB by adorning with a shawl and issue of a "Commendation Certificate" on the last day of the month in an official function.

2. Orders were issued in the reference seventh cited on presentation of "Crest" as Memento in addition to Commendation Certificate and Shawl for retiring employees of Tamil Nadu Electricity Board at a cost not exceeding Rs.130/- per piece.

3. Subsequently, in the reference eighth cited, orders were issued that the cost fixed for the purchase of memento "Crest" be enhanced from Rs.130/- to Rs.200/- per piece. Also, approval was accorded for printing all three symbols (viz) TNEB Ltd., TANGEDCO and TANTRANSCO in the Memento "Crest" as printed in the calendar.

4. Now, it has been proposed to enhance the ceiling limit of purchase of Memento from Rs.200/- to Rs.500/- and it has been decided to accept the same. Accordingly, it is hereby ordered that the cost fixed for the purchase of memento "Crest" be enhanced from Rs.200/- to Rs.500/- (Rupees five hundred only) per piece, which includes printing of all three symbols of TNEB Ltd., TANGEDCO and TANTRANSCO, name of the employee, his/her photo, Designation, Date of Joining and Date of Retirement.

(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)

A.MANIKKANNAN
SECRETARY

# வாரிய ஆணை 2, நாள் 16.4.2022 ன் மூலம் பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்க தொழிற் சங்கங்கள் வலியுறுத்தியதின் அடிப்படையில் திருப்பிச் செலுத்தும் முன்பணக் கடன் வழங்க வகை செய்யும் வாரிய உத்திரவு

**ABSTRACT**

Establishment – TANGEDCO – State Public Sector Undertakings/Statutory Boards – Ban on creation of posts in all the State Public Sector Undertakings/Statutory Boards – Adoption of Government orders in TANGEDCO - Orders Issued – Relaxation of certain Item Nos. (ix) and (x) of the proceedings – Orders - Issued.

SECRETARIAT BRANCH

(Per.) FB TANGEDCO Proceedings No.16

Dated 27th June 2022.
Aani-13.
Thiruvalluvar Aandu 2053.

Read :-

1. Government Lr. No.3157/Finance (BPE)/2022, dated 26.01.2022.
2. (Per) FB TANGEDCO Proceedings No.2 SB dated 12.04.2022.
3. Extract from the minutes of 107th Board meeting of TANGEDCO held on 07.06.2022.

*****

**PROCEEDINGS:-**

In the Government Letter first read above, the Government had reiterated the guidelines issued in G.O. Ms.No.27 Finance (BPE) Department, dated 21.01.2002, and directed to ensure that no new posts are created at any levels without prior approval of Government and for creation of new posts in case of emergency, forward necessary proposals to Government, duly surrendering some other posts commensurate with the new creation of posts along with the copy of G.O. in which the surrendering post was originally sanctioned/created. The Government had further directed to place the above letter in the ensuing Board meeting.

2. Based on the above direction of the Government, a proposal has been placed before the 106th Board Meeting of TANGEDCO held on 19.03.2022 for adoption of Government letters for adherence in TANGEDCO. The Board has approved the proposal and orders have been issued vide Proceedings second read above.

3. Consequent to the orders issued in the Proceedings second read above, objections were raised by several Unions/Association to withdraw the guidelines mentioned in (Per) FB TANGEDCO Proceedings No.2 SB dated 12.04.2022. Hence, necessary proposal for withdrawal of the Proceedings second read above has been placed in the 107th Board meeting of TANGEDCO held on 07.06.2022.

4. After careful consideration, the Board of TANGEDCO has minuted that ;

> "The Board agreed to relax item (9) and (10) from the instructions issued in (Per) FB TANGEDCO Proceedings No.2 SB dated 12.04.2022 and further directed that Staff Welfare Schemes such as sanction of House Building Advance, Conveyance Advance, Education Advance and Computer Advance etc. may be considered for sanction out of TANGEDCO/TANTRANSCO's own funds".

5. Accordingly, it is hereby ordered that, Item Nos. (ix) & (x) ordered in (Per) FB TANGEDCO Proceedings No.2 SB dated 12.04.2022 be relaxed and the staff welfare schemes such as sanction of House Building Advance, Conveyance Advance, Education Advance and Computer Advance etc. be considered out of TANGEDCO/TANTRANSCO from its own funds.

6. It is also ordered that all other guidelines/instructions issued in the proceedings second read above be followed scrupulously without any deviation.

**(BY ORDER OF THE BOARD)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**

# RWE பதவியிலிருந்து JE-II பதவிக்கு நிரப்ப Declaration தேவையில்லை என்ற உத்திரவு

Administrative Branch
144, Anna Salai,
Chennai – 02.

Letter No.014872/G.67/G.671/2022-2, dated 18.06.2022

From

Thiru. A.MANIKKANNAN, M.A.,B.L., M.B.A.,
Chief Engineer/Personnel (FAC)

To

All the Chief Engineers,
All the Superintending Engineers.

Sir/Madam,

Sub: Recruitment – Class III Service - Filling up of Vacancies of Junior Engineer/Electrical II Grade – Appointment by transfer method against reserved vacancies for the employees in RWE categories (Non-Diploma Holders) – Proposals called - Further clarification - Regarding.

Ref:- This office Letter No.014872/G.67/G.671/2022-1, dt.17.05.2022.

***

I am to invite your attention to the reference cited wherein proposals were requested from eligible employees for filling up the vacant post of Junior Engineer/ Electrical II Grade from the eligible RWE employees (Non Diploma holders). In the said letter along with Annexure – I, a declaration was requested to be submitted by the employees while applying to the post of Junior Engineer/Electrical II Grade .

2. In this regard, I am to inform you that the declaration requested in the above letter may be treated as withdrawn and the proposals may be obtained from the employees without declaration. Further, the due date for receipt of such application from the employees is extended till 30.06.2022 and the applications received must be sent to this office in complete shape on or before 05.07.2022. All other conditions stipulated under ref cited remains unchanged.

Yours faithfully,

Sd/-20.06.2022
SENIOR PERSONNEL OFFICER/RECRUITMENT
for CHIEF ENGINEER/PERSONNEL (FAC)

# ஈட்டிய விடுப்பை, ஒப்பளிக்க மறு உத்திரவு வரும் வரை நீட்டித்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவு

**(ABSTRACT)**

TANGEDCO – LEAVE REGULATIONS – Periodical surrender of Earned Leave and payment of Leave Salary – Suspended until further orders – Orders issued by the Government of Tamil Nadu – Adoption in TANGEDCO – Orders – Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(PER) FB TANGEDCO PROCEEDINGS NO.13, DATED THE 18TH JUNE, 2022.**

Subakirudu Varudam, Aani-4,
Thiruvalluvar Aandu-2053.

**READ:**

1. G.O. (Ms.) No.48, P&AR (FR-III) Department, dt.27.04.2020.
2. (Per) FB TANGEDCO Proceedings No.15 (SB), dated.28.05.2020.
3. (Per) CMD TANGEDCO Proceedings No.129 (SB), dated 24.08.2020.
4. G.O. (Ms.) No.48, P&AR (FR-III) Department, dt.13.05.2021.
5. (Per) CMD TANGEDCO Proceedings No.113 (SB), dated 19.05.2021.
6. G.O. (Ms.) No.36, Human Resources Management (FR-III) Department, dated 11.04.2022.

******

**PROCEEDINGS:**

Based on the orders issued in the Government Order first read above, orders were issued for suspension of the facility of the periodical surrender of Earned Leave for encashment for 15 days every year/30 days every two years, initially for a period of one year to all the officials/employees of TANGEDCO, due to the fiscal stress arising from the COVID-19 pandemic - vide Proceedings second and third read above. Subsequently, based on the Government Order fourth read above, orders were issued suspending the said benefit for one more year till 31.03.2022 in view of the second wave of Corona and the need to conserve resources to fight the pandemic - vide Proceedings fifth read above.

**2.** Now, in G.O. sixth read above, orders have been issued suspending the periodical surrender of Earned Leave for encashment for 15 days every year/30 days every two years, until further orders to all the Government Employees and Teachers. It has also been ordered therein that the said orders shall be applicable to all Statutory bodies including all State Corporations, Local Bodies, Boards, etc. Hence, a proposal for adoption of the said orders in TANGEDCO, was placed before the Board for its decision. After detailed examination, the Board has approved the said proposal.

**3.** Accordingly, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited hereby direct that the benefit of periodical surrender of Earned Leave for encashment for 15 days every year/30 days every two years by the officials/employees of TANGEDCO, be suspended until further orders.

**4.** The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**

## மத்திய சென்னை ஆண்டு பேரவை
26.06.2022








சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு
புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து
பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்திட வலியுறுத்தி
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்
26.06.2022

35

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 9.07.2022




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian

36